www.tamilarangam.net

தந்துதவியவர்: தேசம்நெற்

Donation U.K 40.p. France 6FF

**ரஞ்சிற் அன் கோ**

சொலிசிட்டர்ஸ்

அகதிகள் தொடர்பான விடயங்கள், பொலிஸ் நிலையம் தொடர்பான பிரச்சனைகள் மற்றும் சகல விதமான சட்ட ஆலோசனைகளுக்கும் தொடர்புகொள்ளுங்கள்:

176 மிச்சம் றோட், ரூட்டிங்

தொலைபேசி 081 - 767 9717

# ஈழபூமி

லண்டனில் இருந்து வெளிவரும் இரு வாரப்பத்திரிகை

ஆண்டு 2 இல 3 01-09-1993 பக்கங்கள் 10

# புலிகளின் தாக்குதலில் இரு படகுகள் நிர்மூலம் – கிளாலிக் கடலில் புலிகளின் மற்றுமோர் வெற்றி

**இலங்கை இராணுவத்தின் இரண்டு பிளாஸ்திக் படகுகளை தமிழீழ விடுதலைப்புலிகளின் கடற் புலிகள் நிர்மூலமாக்கினர்.**

கிளாலிக் கடலேரிப்பகுதியில் நடை பெற்ற புலிகளின் இத்தாக்குதலால் இலங்கை கடற்படைக்குச் சொந்தமான இரண்டு படகுகளிலும் சென்ற ஐந்து கடற்படை வீரர்களும் பலியாகியுள்ளனர். உள்ளூரில் செய்யப்பட்ட பைபர் கிளாஸ் பெற்றோல் படகினை அதிகாலையில் பல படகுகளில் வந்து திடீர்த் தாக்குதலை நடத்தினர் என இலங்கை இராணுவ அதிகாரிகள் தெரிவித்தனர். இவர்கள் தமது தரப்பில் இரண்டு படகுகள் நிர்மூலமாக்கப் பட்டதுடன் 5 கடற்படையினரும் கொல்லப்பட்டனர் என ஒப்புக் கொண்டுள்ளனர். தாக்குதலில் எத்தனை படகுகள் சம்பந்தப் பட்டது என தெரியாவிடினும் காயமுற்ற 5 அதிகாரிகளை காப்பாற்றச் சென்ன படையினர் மீட்டனர் என இந்த அதிகாரிகள் மேலும் தெரிவித்தனர்.

கிளாலிக் கடலேரிப் பகுதியில் இயந்திரப் படகுகள் ஓடுவதை இலங்கை அரசு தடை செய்தது யாவரும் அறிந்ததே. புலிகள் தரப்பில் ஏற்பட்ட சேதம் இது வரை அறிவிப்படவில்லை. புலிகளின் செய்திகளின் படி சுமார் பதினெரு பேர் வரை இறந்திருக்கலாம் எனுவும் 7 பேர் காயமுற்றதாகவும் பலரைக் காணவில்லை எனவும் நம்பப்படுவதாகத் தெரிவித்தனர்.

இத்தாக்குதல் கடந்த மாதம் பொதுமக்கள் மீது இராணுவம் மேற்கொண்ட தாக்குதலையடுத்தே தாம் இத்தாக்குதலை மேற்கொண்டதாக விடுதலைப் புலிகள் தெரிவித்தனர்.

இதனிடையே இலங்கை அரசு லலித் கொலை சம்பந்தமாக பத்து தமிழ் இளைஞர்கள் பற்றிய தகவல் தருமாறு வேண்டுதல் விடுத்துள்ளது. இதற்கு தகுந்த சன்மானமும் தரப்படும் என அறிவிக்கப்பட்டுள்ளது. இது சம்பந்தமான படங்களும் போஸ்டர்களும் கொழும்புப் பகுதி எங்கும் ஒட்டப்பட்டுள்ளது.

# கிளாலியினூடாக பாதுகாப்பான போக்குவரத்துச் சேவை ஆரம்பிக்க முட்டுக்கட்டை

## ஐ.நா பிரிவின் முயற்சி தோல்வி

(வவுனியா)

ஐக்கிய நாடுகள் ஸ்தாபனத்தின் செயலாளர் கிளாலிக் கடல்மூலம் ஒரு பாதுகாப்பான கப்பல் சேவையை தொடங்க மேற்கொண்ட முயற்சி தோல்வியில் முடிந்துள்ளது. மேற்படி முயற்சிகள் 21-8-93 சனிக்கிழமை தோல்வியில் முடிந்தது. கிளாலியினூடாக ஒரு பாதுகாப்பான பாதையோ அன்றி ஆனையிறவினூடாக ஒரு பாதையோ திறப்பதற்கு நாம் ஒத்துழைப்போம். அங்கு இலங்கை அரசு ஒரு சோதனை நிலையம் ஒன்றை செய்வதற்கு நாம் அனுமதிக்கமாட்டோம் என்று புலிகள் தரப்பில் தெரிவித்துள்ளனர்.

இதுவரையில் 400இற்கு மேற்பட்டோர் கிளாலியைக் கடக்க முனைகளில் அரச படைகளின் குண்டுத்தாக்குதல்களினால் இறந்துள்ளார்கள் என்பது குறிப்பிடத்தக்கது.

கத்தோலிக்க பிசப்களின் மாநாட்டினை அடுத்து இலங்கை அரசு ஒரு பாதையைத் திறக்க வேண்டிய நெருக்கடிக்குள்ளானது.

அகதிகளுக்கான ஐக்கிய நாடுகள் சபையின் நிறுவனத்தின் உயர்

தொடர்ச்சி 3ம் பக்கம்

# தமிழீழத்திற்காக நாம் தொடர்ந்து போராடுவோம் புலிகளின் லண்டன் கிளை

(லண்டன்)

நாம் எமது விடுதலைக்காக தொர்ந்து போராடுவோம் எங்களை அரசாங்கம் தொடர்ந்து அடக்க முற்படுமானால் தனிநாட்டைத்தவிர வேறு வழியில்லாமல் போய்விடும் விடுதலைப்புலிகள் திரும்பத்திரும்ப தெளிவுபடுத்தியுள்ளார்கள். எம்மை அழிக்க முற்பட்டால் நாம் போராடுவதைத் துரிதப்படுத்துவோம் இவ்வாறு தெரிவத்துள்ளார்கள் அண்மையில் வெளியிட்டுள்ள அறிக்கை ஒன்றில்.

இம்மாதம் 11-ஆம் திகதி ஜெனிவாவில் நடந்த பாரபட்சத் தடுப்பும் சிறுபான்மைப் பாதுகாப்பும் என்ற தலைப்பில் நடந்த கூட்டத்தில் பங்கு கொண்ட இலங்கைக் குழுவின் தலைவருக்கு பதிலளித்த லண்டன் கிளையின் அறிக்கையிலேயே இவ்வாறு குறிப்பிட்டிருந்தது. அரசு தரப்பில் தலக் மாரப்பன என்பவரால் அறிக்கை வெளியிடப்பட்டது. இதனைப்புலிகள் தரப்பில் வன்மையாகக் கண்டித்துள்ளனர். அரசின் அறிக்கை பிரச்சனைக்காண அடிப்படைக்காரணியை கூறவில்லை என்று புலிகள் தெரிவித்துள்ளனர்.

1983 இற்குப் பின்னர் 30000 பேர் பலதரப்பிலும் இறந்துள்ளார்கள் பாராளுமன்றத் தெரிவுக்குழு ஒரு தீர்வை நோக்கி வேலை செய்கின்றது என்பதை புலிகள் தரப்பில் முற்றாக மறுத்தார்கள். இந் தத் தெரிவுக்குழு இலங்கை அர சிற்கு தேவையான நல்ல பெயரை உலக மட்டத்தில் ஈட்டிக் கொடுக்கின்றது. தேவையான உதவிகளை ஒருபுறம் பெறும் இலங்கை அரசு மறுபுறத்தில் எம்மக்களை அழித்து வருகின்றது.

மாரப்பனவின் கருத்தின்படி நாம் பேச்சுவார்த்தைக்கு மறுப்பு தெரிவித்துள்ளோம் என்று அறிக்கை கூறுகின்றது. இதனை நாம் முற்றாக மறுக்கின்றோம். அத்தோடு ஒரு பாதுகாப்பான பாதையை ஆனையிறவினூடாக திறப்பதற்கு யு.என்.எச்.சி.ஆர் இக்கு எமது ஒத்துழைப்பைக் கொடுகத்திருக்கின்றோம் அரசாங்கம் பரிசோதனை முகாம் இடுவதையே நாம் மறுக்கிறோம்.

கிளாலிப் பாதை ஆபத்தானது என்பது யாவரும் அறிந்ததே இன்றுவரையில் சுமார் 200 பேர் இந்தக்கடலில் உயிர்நீத்துள்ளார்கள்.

# ரூட்டிங்கில் தமிழ்க் குழுக்களிடையே மோதல்

(நமது நிருபர் ரூட்டிங்)

கடந்த 24ம்திகதி செவ்வாய்க்கிழமை இரவு 10 மணியளவில் இரு தமிழ்க்குழுக் களுக்கிடையில் பாரிய மோதல் ஏற்பட்டது. மேற்படி சம்பவம் தொடர்பாக பூமிக்குக் கிடைத்த தகவல்கள் வருமாறு.

சம்பவம் நடந்த தினத்துக்கு முன்னர் நடந்த ஒரு திருமண வைபவத்தில் இந்த இரு குழுக்களும் வாக்குவாதத்தில் ஈடுபட்டனர். இவ்வாக்குவாதம் முற்றியதை அடுத்து திருமண வீட்டிலிருந்து ஒருகுழுவினர் வெளியேறினர். அந்தக் குழுவினர் தமது வதிவிடமான ரூட்டிங்குக்கு வந்து தர்ககப்பட்ட மற்ற குழுவைச் சேர்ந்த ஒருவர் வீட்டு க்குச் சென்று அடித்து தாக்குவோம் என மிரட்டியுள்ளனர். இது பற்றி அறிந்த மற்றையோர் மிரட்டிய குழுவின் வீட்டுக்குச் சென்று அங்கிருந்த ஒரு சிலரிடம் இது பற்றி விசாரித்துவிட்டுச் சென்றனர்.

அதே தினம் இது பற்றி அறிந்த மற்றையோர் (சுமார் 8 பேர்) இவர்களின் வீட்டுக்கு வந்தவர்களைத் தேடி கார்களில் ரூட்டங் பிரதான வீதியில் உள்ள தமிழ் கடைப் பகுதிக்கு வந்தார்கள். இவர்கள் தேடி வந்தவர்களில் இருவர் மாத்திரம் சிவராஜ் வர்த்தக நிலையத்தின் முன் நின்றார்கள். வந்த எட்டுப்பேரும் சைமன் வைன்பார் நிலையத்தின் முன்பாக நின்றார்கள். சிலநிமிடங்களின் பின் இரு குழுக்களுக்குமிடையில் வாக்குவாதம் மீண்டும் ஏற்பட்டது. சைமன் வைன்பார் பக்கம் நின்ற எட்டுப் பேரும் கத்திகள், கேபிள்கள், பொல்லுகள் போன்றவற்றை காரில் பதுக்கிவைத்திருந்தனர். வாக்குவாதம் உச்ச நிலையை அடையவே கோட் சூட் அணிந்த ஒருவர் கோட்பையுள் வைத்து "எடுக்கட்டோ? எடுக்கட்டோ" என பாவனை செய்தார். இதனை எதிர்க்குழு கணக்கில் எடுக்காமல் பார்த்துக் கொண்டிருந்தனர். பயப்படவில்லையே என உணர்ந்த இவர் உள்ளே

தொடர்ச்சி 3ம் பக்கம்

அனைத்து செய்திகளையும் தாங்கிவரும் தனித்துவமான பத்திரிகையே ஈழபூமி

www.tamilarangam.net



# உலகத் தொழிலாளர்களே ஒன்று சேருங்கள்

## கார்ல் மார்க்ஸ் வாழ்கைச் சுருக்கம் 2

### சென்ற இதழ்த் தொடர்ச்சி

ஹெகலின் தத்துவ ஞானத்தில் இருந்து தீவிரமான முடிவுகளைப் பெறுவதற்கு முயற்சி செய்த இளம் ெகல்வாதிகளுடன் மார்க்ஸ் தன்னுடைய மாணவப் பருவத்தில் பழகத் தொடங்கினார். அவர் இக்காலத்தில் ஹெகலின் நூல்களைப் படித்தார். டெமாக்ரீடசின் இயற்கைத் தத்துவ ஞானத்துக்கும் எபிகூரசின் இயற்கைத் தத்துவ ஞானத்திற்கும் இடையிலான வேறுபாடு என்ற தலைப்பில் மார்க்ஸ் எழுதிய ஆராச்சிக் கட்டுரை அவர் கருத்து முதல்வாத நோக்கைப் பின்பற்றிய போதிலும் ஹெகலின் முரண்பாடான தத்துவ ஞானத்தில் இருந்து நாத்திக மற்றும் புரட்சிகரமான முடிவுகளைப் பெற தொடங்கிவிட்டதை எடுத்துக் காட்டுகிறது. உதாரணமாக, எபிகூரசின் பொருள்முதல் வாதத்தையும் நாத்திகத்தையும் ஹெகல் கூர்மையாகக் கண்டனம் செய்தார், ஆனால் மார்க்ஸ் அதற்குமாறாக அந்த பழங்காலத்தைய கிரேக்கத் தத்துவ ஞானி மதம் மற்றும் மூடநம்பிக்கைகளை எதிர்த்து நடாத்திய வீரமான போராட்டத்தையும் போற்றினார். மார்க்ஸ் தன்னுடைய ஆராய்சிக் கட்டுரையை இயெனா பல்கலைக் கழகத்திடம் சமர்ப்பித்து 1841 ஏப்ரலில் தத்துவஞானத்தில் டாக்டர் பட்டம் பெற்றார். பல்கலைக்கழக கல்வி முடிந்தபிறகு விஞ்ஞான ஆராய்ச்சிகளில் ஈடுபடுவதும் போன் நகரத்தில் ஒரு பேராசியப்பதவியைப் பெறுவதும் அவருடைய உத்தேசமாக இருந்தது. ஆனால் பல்கலைக் கழகத்தில் இருந்து முற்போக்கான பேராசிரியர்களை வெளியேற்றுகின்ற பிற்போக்கான கொள்கையை பிரஷ்ய அரசாங்கம் கடைப்பிடித்தது. பிரஷ்ய பல்கலைக்கழகங்களில் முற்போக்கான விமர்சனச் சிந்தனைக்கு இனி இடம் இல்லை என்று மார்க்ஸ் எண்ணியதை இது வலுப்படுத்தியது.

முற்போக்கான கருத்துக்களைப் பரப்புவதற்கும் அரசியல் பிற்போக்குவாதத்திற்கும் விஞ்ஞான மறுப்புப் போக்குக்கும் எதிராக போராடுவதற்கும் ரைன் பத்திரிகை மார்க்சுக்கு மிகவும் துணை புரிந்தது. அவர் 1842 ஏப்ரலில் அந்தப் பத்திரிகையில் வேலைக்குச் சேர்ந்தார். அதே வருடத்தில் அக்டோபர் மாதத்தில் அதன் ஆசிரியர் ஆனார். அவருடைய ஆசிரியப் பொறுப்பில் ரைன் பத்திரிகையின் புரட்சிகர–ஜனநாயக போக்கு மேன் மேலும் ஆணித்தரமாக வெளிப்பட்டது. பிரஷ்யாவிலும் ஜேர்மனி முழுவதிலும் நிலவிய சமூக, அரசியல் ஆன்மீக ஒடுக்கு முறை ஆட்சி முறையை எதிர்த்து அவர் துணிகரமான இயக்கத்தைத் தொடங்கினார். உண்மையான புரட்சிகர ஜனநாயக வாதியான மார்க்ஸ் பெரும்திரளான மக்களின் பொருளாதார நலன்களை ஆதரித்து ஆறாவது ரைன் பிரதிநிதிகள் சபையில் நடைபெற்ற விவாதம் (மூன்றாம் கட்டுரை) மரம் திருடுவதைப்பற்றிய சட்டம்குறித்த விவாதம், மோஜெல் நிருபருக்கு ஆதரவாக மற்றும் இதர கட்டுரைகளை எழுதினார். பத்திரிகையில் கிடைத்த அனுபவம் ஜேர்மனியின் அரசியல் வாழ்க்கை பற்றியும் உழைக்கும் மக்களின் நிலைமைகளைப்பற்றியும் மார்கசுக்கு மேலும் சிறப்பான அறிவைக் கொடுத்தது. மக்களின் அத்தியாவசியமான தேவைகளைப்பற்றி பிரஷ்ய அரசாங்கமும் அதன் அதிகாரிகளும் ஈவிரக்கம் இல்லாமல் நடந்து கொள்வதைப்பற்றிய எண்ணற்ற விபரங்கள் அவருக்குக் கிடைத்தன. அவற்றின் விளைவாக இந்த அரசாங்கமும், அதன் சட்டங்களும் அதிகாரிகளும் மக்களின் நலன்களுக்கு மாறாக, ஆட்சிபுரியும் சமூகப்பிரிவுகளான மேன் மக்கள், மதக்குருக்களின்

**கடவன்**

நலன்களையே பிரதி பலிக்கிறார்கள். அவர்களுக்காகவே பாடுபடுகிறார்கள் என்ற முடிவுக்கு மார்க்ஸ் வந்தார்.



பிரெடெரிக் எங்கெல்ஸ். 1864

ரைன் பத்திரிகையில் வேலை செய்ததன் விளைவாகவே பொருளாதாரத்தை ஆராய வேண்டுமென்ற எண்ணம் அவருக்கு ஏற்பட்டது. மரம் திருடுவதைப்பற்றிய சட்டம் மற்றும் மோஜெல் விவசாயிகளின் நிலைமை பற்றி தான் செய்த ஆராய்ச்சிகளே கலப்பற்ற அரசியலில் இருந்து பொருளாதார உறவுகளுக்கும் அதில் இருந்து சோசலிசத்திற்கும் முன்னேறும்படி தன்னைத் தூண்டின என்று மார்க்ஸ் பிற்காலத்தில் அடிக்கடி கூறுவதுண்டு என்பார் எங்கெல்ஸ்.

ஜேர்மனியில் இருந்து பெருந்திரளான ஏழை மக்களின் பயங்கரமான நிலைமை மட்டுமல்லாமல் அதிக வளர்ச்சியடைந்த முதலாளித்து நாடுகளான பிரிட்டனிலும் பிரான்சிலும் நடைபெற்ற சம்பவங்களும் பொருளாதார மற்றும் சமூக பிரச்சனைகளை ஆழமாக ஆராய்ச்சி செய்யும்படி மார்க்சைத் தூண்டின. 1831 மற்றும் 1834 இல் நடைபெற்ற லியோன் தொழிலாளர்களின் எழுச்சி பிரிட்டனில் 1830 க்களில் கடைசியில் ஏற்பட்ட பாட்டாளி வர்க்கத்தின் புரட்சிகர இயக்கத்தின் எழுச்சி அது அரசியல் தன்மையைப் பெற்று 1842 இல் அதன் சிகரத்தை (சார்ட்டிசம்) எட்டியது. மற்றும் தொழிலாளர்களின் ஏராளமான பல நடவடிக்கைகள் மாபெரும் வரலாற்று முக்கியத்துவத்தைக் கொண்டிருந்தன. அக்காலத்தில் இருந்து ஐரோப்பாவில் அதிகமான வளர்ச்சியடைந்த நாடுகளில் முதலாளி வர்க்கத்திற்கும் பாட்டாளி வர்க்கத்திற்கும் இடையில் வர்க்கப் போராட்டம் முக்கியமான பிரச்சனையாயிற்று.

பாட்டாளி வர்க்கம் என்ற புதிய வாக்கம் போராட்ட அரங்கத்துக்குள் நுழைந்தது. புதிய சமூகப் பொருளாதாரப் பிரச்சனைகள் என்று அவர் கருதியவற்றை ஆழமாக ஆராயும்படி மாக்சைத் தூண்டியது. அப்பொழுது பிரிட்டனிலிலும் பிரான்சிலும் வெளியாகிக் கொண்டிருந்த சோசலிஸ்டு நூல்களில் அவர் அக்கறையைத் தூண்டியது.

ரைன் பத்திரிகைப்பணி ஜெர்மனியில் பெருந்திரளான மக்களின் வாழ்க்கை மற்றும் போராட்டத்துடன் அவருக்கேற்பட்ட நேரடியான தொடர்பு மற்றும் இதர நாடுகளின் தொழிலாளி வர்க்க இயக்கத்தோடு அவருக்கு ஏற்பட்ட உறவு இளம் மார்க்ஸிடம் மகத்தான தாக்கத்தை ஏற்படுத்தின. மார்க்ஸ் கருத்து முதல் வாதத்தில் இருந்து பொருள்முதல் வாதத்திற்கும் புரட்சிகரமான ஜனநாயகத்தில் இருந்து கம்யூனிசத்திற்கும் மாறுகின்ற அறிகுறிகளை நாம் இங்கே பார்க்கின்றோம்.

பத்திரிகையின் போக்கு மற்றும் அதன் செல்வாக்கு வேகமாக வளர்ச்சி அடைவதைப் பற்றி அஞ்சிய பிரஷ்ய அரசாங்கம் கடுமையான தணிக்கையை ஏற்படுத்தியது. கடைசியில் 1843 ஏப்ரல் முதலாம் திகதியில் இருந்து ரைன் பத்திரிகையை வெளியிடுவதை நிறுத்தவேண்டும் என்று 1843 ஜனவரி 19ல் ஆணையிட்டது. பத்திரிகையின் பங்குதாரர்கள் அதன் கண்டனக் குரலை மட்டுப்படுத்த உத்தேசித்த பொழுது. மார்க்ஸ் அதை ஒத்துக் கொள்ளவில்லை. அவர் ஆசிரியப் பொறுப்பில் இருந்து மார்ச் 17ல் விலகிக் கொண்டார். வெளிநாட்டில் இருந்து ஒரு புரட்சிகரமான சஞ்சிகையை வெளியிடுவது என்று எல்லையைத்தாண்டி ஜேர்மனிக்குள் அனுப்பிவைப்பதென்று ஆலோசித்து அவர் வெளிநாட்டுக்குப் போக முடிவு செய்தார். இருக்கின்ற எல்லாவற்றையும் கடுமையாக விமர்சிப்பது அந்தச் சஞ்சிகையின் நோக்கம் என்று அவர் திட்டமிட்டார்.



கார்ல் மார்க்சும் பிரெடெரிக் எங்கெல்சும் கார்ல் மார்க்சின் புதல்வியருடன்: ஜென்னி, எலியனோரா, லௌரா. 1864

மார்க்ஸ் ஜேர்மனியை விட்டுப் புறப்படுவதற்கு முன்பு ஜென்னி போன் வெஸ்ட்பாலன் என்ற பெண்ணைத் திருமணம் செய்து கொண்டார். மார்க்சும் ஜென்னியும் குழந்தைப்பருவத்தில் இருந்து பழகியவர்கள். அவர்கள் இருவரும் திருமணம் செய்து கொள்வதென்று தங்கள் மாணவப் பருவத்திலேயே முடிவுசெய்தார்கள். அவர் 1843ம் வருடத்தின் கோடைகாலம் மற்றும் இலையுதிர்காலத்தின்போது கிரேய்ட்ஸ்நாரில் தங்கியிருந்தார். அங்கே ெகலின் சட்டம் பற்றிய தத்துவ ஞானத்தைப்பற்றித் தன்னுடைய விமர்சன ஆராய்ச்சியைச் செய்தார். அவர் எழுதிய சட்டம் பற்றிய ெகலியத் தத்துவஞான விமர்சனத்திற்கு ஒரு கருத்துரை பூர்த்தியடையாத கையெழுத்துப்பிரதியின் வடிவத்தில்தான் நமக்குக்கிடைத்திருக்கிறது. புதிய பொருள்முதல் வாத உலகக்கண்ணோட்டத்திற்கு மார்க்ஸ் மாறுவதில் அது ஒரு திருப்புமுனையாகும். ‘இருக்கின்ற எல்லாவற்றையும் கடுமையாக விமர்சிப்பது’ என்ற குறிக்கோளை அறிவித்த மார்க்ஸ் ரைன் பத்திரிகையில் பணியாற்றிய காலத்தில் எழுந்த அரசுக்கும் சமுதாயத்தின் பொருளாயத நிலைமைகளுக்கும் இடையில் உள்ள உறவுகள் இடைச்சார்புகள் என்ற பிரச்சனையை எடுத்துக்கொள்வதன் மூலம் இந்த விமர்சனத்தைத் தொடங்கினார்.

மிகுதி அடுத்த இதழில்

www.tamilarangam.net



# ஈழபூமி

ஆண்டு 2 இல 3 01-09-1993 பக்கங்கள் 10

## அரங்கில் ஏறியவை அம்பலத்தில் தோன்றின

தமிழீழப்போராட்டம் ஏற்படுத்திய பக்கவிளைவுகளில் ஒன்றான புலம்பெயர்வு நாம்நாடு ஒன்றை அமைத்துக் கொள்வதன் அவசியத்தை தெள்ளத்தெளிவாக உணர்த்தியதை மறுத்துவிடமுடியாது. ஐரோப்பிய நாடுகளைநோக்கி நாம் வந்ததன் பின்னணிக் காரணங்களில் தமிழீழத்தில் ஏற்பட்ட இயக்க மோதல்கள் அந்த மோதல்களின் நிமித்தம் மேற்கொள்ளப்பட்ட மனித அழிப்புகளும் மனித உரிமைமீறல்களும் முக்கியமாக அமைகிறது. இங்கே பிரித்தானியா நாம் புலம் பெயர்ந்துவந்ததன் காரணம் பொருளாதாரத் தேவைகளை பூர்த்தி செய்யும் பொருட்டே என்று கூறி எம்மைப் பொருளியல் அகதிகளாக மாற்றி வந்த இடத்திற்கே திருப்பியனுப்பி விடுவதற்காக கங்கணம் கட்டிநிற்கும் இந்த வேளையில் நாம் எமக்குள்ளே முட்டிமோதிக் கொள்கிறோம். வேறுபட்ட இடங்களில் இருந்து வந்தவர்கள், வேறுபட்ட இயக்கங்களில் இருந்து வந்தவர்கள் என்று எமக்குள்ளே வேறுபாடுகள் இருக்கின்ற போதிலும், நாம் யாவரும் அகதிகள் என்ற விடயத்தில் ஒரே அணியில் இருககின்றோம் என்ற ஞாபகம் எம்மில் நிறையப் பேருக்கு ஞாபகம் இல்லாத விடயம்.

சந்தியில் வைத்துச் சுடுவதும் கேள்வி கேட்டவரை அடிப்பதும் என்று மனிதஉரிமை மீறல்களிலேயே வாழ்ந்துவிட்டுவந்த எமது மக்களின் மனங்களிலே அதன் எச்ச சொச்சங்கள் இன்னும் அழிந்துவிடவில்லை என்பதற்கான ஆதாரங்கள் இன்னமும் இருந்துகொண்டுதான் இருக்கின்றன. படமாளிகைகளிலும் நடனநாடக அரங்குகளிலும் நிகழ்ச்சிகளைக் குழப்புவதாகத் தொடங்கிய குழுச்சண்டைகள், எம்மினத்தின் வீரசாகசங்கள் இங்கேயும் தொடர்ந்து கொண்டுதான் இருக்கின்றன.

தமழீழத்தில் இருக்கின்றது போலவே இயக்க மோதல்கள் புலம் பெயர்ந்து வாழுகின்ற மேலைத்தேய நாடுகளிலும் அதே வடிவிலே அடிக்கடி தோன்றி மறைவதை நாம் பாராமுகமாக தட்டிக்கழித்துவிடக் கூடாது. சுவிஸிலே இயக்கங்களுக்கிடையிலே ஏற்பட்ட மோதல் ஒரு இயக்கம் இன்னொரு இயக்கத்தை வெட்டித் தீர்ப்பதில் முடிந்தது. தாயகம் பத்திரிகையில் எழுதியதற்காக அதன் ஆசிரியர் விடுதலைப்புலி கனடாக்கிளை ஆதரவாளர்களினால் அடித்துக் காயப்படுத்தப்பட்டார். ஜேர்மனியில் பிரான்ஸில் என்று இந்தத் தாபார் நாகரீகம் தன் ஆணிவேரை பதித்துக்கொள்ளத் தவறவில்லை.

இதற்கு லண்டன் மட்டும் விதிவிலக்காக அமைந்துவிடுமா என்ன? அரங்குகளில் குழப்புவற்கென்றே ஒரு கூட்டம் வரும் அதனை முறியடிப்பதற்காக இன்னொரு குழு சண்டையிடும். அந்தச் சண்டையின் முடிவு, ஊர்களுக்கடையிலான மோதலாக உருவெடுத்ததை கடந்தகால நிகழ்வுகள் எமக்குக் காட்டத் தவறவில்லை. அரியாலை - மன்னார், அரியாலை வல்வெட்டித்துறை என்று படமாளிகைகளில் தொடங்கிய சண்டைகள் கார்களினால் அடித்து கால்முறிக்கும் அளவிற்கு இட்டுச்சென்ற நிலை மேற்சொன்னவற்றிற்கு உதாரணங்களாகும். கேள்வி கேட்க நாதியற்றவர்களை நாயைப்போல் சுட்ட இயக்கங்களின் மனித நேய மறுப்பு செயற்பாட்டு வடிவங்களின் எச்சங்களே சவுத்தோலில் கத்தியால் குத்தப்பட்டு கொல்லப்பட்ட இளைஞனின் கொலையும் ரூட்டிங்கில் 14 பேர் சேர்ந்து திருமணமான ஒருவரை அடித்துக் கொன்ற சம்பவங்களுமாகும்.

மனிதபிமனமும் மனித உரிமையும் தமிழீழத்தில் செத்துவிட்டதென்றால் புலம் பெயர்நத எங்கள் மத்தியிலே குற்றுயிராய்க்கிடந்து துடிக்கிறது. அரங்குகளில் ஆரம்பித்த இச்சண்டைகள் பருத்தன. உருவம் மாறின. மனித நேயத்தைப் புதைத்தன. மீண்டும் ஒரு ஈழத்தெருக்களை லண்டன் தெருக்களில் உருவாக்க அத்திவாரம் போட்டனவா என்று கேட்கும் அளவிற்கு நடந்தேறியிருக்கிறது ரூட்டிங் பகுதியில் நடந்த தமிழ் வர்த்தகரின் கடை ஒன்றின் முன் தீர்க்கப்பட்ட துப்பாக்கி வேட்டுக்கள். இரு குழுக்களுக்கடையிலான இந்த மோதல் அல்ல முக்கியம். இந்தக் குழுவில் ஒன்று வெளிப்படையாகவே ஊர்பாணியில் ஆகாயத்தில் தீர்த்த அந்த இரண்டு வேட்டுக்களும் இரண்டு மனித உயிர்களின்மீது தீர்கப்பட்டிருந்தால்......?

## கிளாலியினூடாக.........

1ம் பக்கத் தொடர்ச்சி

ஸ்தானிகர் மக்களுக்கு பாதுகாப்பான ஒரு பாதையைத்திறந்து விடுவதன்பொருட்டு கடந்த பல மாத காலமாக புலிகளோடும் அரசோடும் பேச்சுவார்த்தைகளை மேற்கொண்டார். புலிகளுடன் உடன்படிக்கை செய்துகொள்வது விரோதமானது. அப்படிச் செய்தால் அவர்கள் அங்கீகரிக்கப்பட்டவர்கள் ஆவார்கள். அவர்கள் உண்மையில் விடுதலைப் போராளிகள் அல்ல, பயங்கரவாதிகளே என்று அரசு தரப்பு வட்டாரங்கள் கருத்து தெரிவித்தன.

ஆனால் இரண்டு வேறுவேறான உடன்படிக்கைகளை தயாரித்து ஒப்பம் இடும்படி அகதிகளுக்கான நிறுவனம் கேட்டுக்கொண்டுள்ளது.

வெள்நாட்டு உறவுகள் அலுவல்களின் பிரிவில் ஜனாதிபதியின் ஆலோசகர் பிராட்மன் வீரக்கோன் கூறுகையில் புதிய பாதையை மனிதாபிமான அடிப்படையில் திறந்துவிட நாம் தயாராய் இருக்கின்றோம். ஆனால் புலிகள் ஊடுருவாது இருக்கும் பொருட்டு நாம் குறைந்தது இரண்டு பரிசோதனை முனைகளை அமைக்கவேண்டும். ஒன்று வடமுனையில் உள்ள சங்குப்பிட்டியிலும் மற்றையது மறுமுனையிலுமாகும். இதறகு புலிகள் முற்றாக மறுப்பு தெரிவித்துவிட்டனர்.

## ஐந்து பாராளுமன்ற உறுப்பினர்கள் இடைநிறுத்தம்

(கொழும்பு)

கடந்த 20-8-93 வெள்ளிக்கிழமை பாராளுமன்றத்தில் வாக்கு வாதப்பட்டமைக்காக பாராளுமன்ற உறுப்பினர்களை சபாநாயர் லீபா முகமது பாராளுமன்ற நடவடிக்கைகளில் இருந்து இடைநிறுத்தம் செய்தார். றிச்சாட் பதிரானா, சி.வி.குணரட்ணா, டி.எம்.ஜெயரட்ணா, மைத்திரிபால சிரிசேனா ஆகியோரே இவ்வாறு தடை செய்யப்பட்ட பாராளுமன்ற உறுப்பினர்கள் ஆவர்.

சபாநாயகர் இவர்களின் வாக்கு வாதத்தில் பல முறை தலையிட்டு கட்டளைகளை விடுத்தபோதும் இவர்கள் நால்வரும் தொடர்ந்தும் சபாநாயகரின் கட்டளைகளை மீறியமைக்காகவே இவ்வாறு இடைநிறுத்தம் செய்யப்பட்டுள்ளார்கள்.

இவர்கள் நால்வரும் தமது தொகுதிக்கு ஒதுக்க வேண்டிய அபிவிருத்தி நிதி விடயத்தில் அரசு பாராமுகமாக இருந்து எவ்வித நிதிகளையும் ஒதுக் கவில்லை என ஜனாதிபதிக்கு மேன்முறையீடு செய்திருக்கிறார் கள்.

ஆனால் இது விடயத்தில் பாராளுமன்றம் எந்தவித நடவடிக்கையையும் எடுக்கவில்லை என்பதே இவர்களின் வாதம். வரவு செலவுத்திட்டத்தில் ஒவ்வொரு பா.உ களுக்கும் ஆண்டுக்கு இரண்டு மில்லியன் ரூபாயை ஒதுக்குவது அபிவிருத்திக்காக பெற உரித்துடையவர்கள் என்பது குறிப்பிடத்தக்கது.

## ரூட்டிங்கில்.........

1ம் பக்கத் தொடர்ச்சி

வைத்திருந்து துப்பாக் கியை எடுத்து வானத்தை நோக்கி சுட முனைய துப்பாக்கியோ இயங்கவில்லை. அச்சமயம் அக் குழுவை சேர்ந்த இன்னொருவர் அவரை வூட்பரி வீதிப் பக்கமாக இழுத்துச்சென்றார். இவ்வீதியில் நின்று துப்பாக்கியை சரிசெய்து விட்டு ஆகாயத்தில் இரண்டு வேட்டுக்களைத் தீர்த்து விட்டு காரில் ஏறி ஓடிவிட்டனர். சம்பவம் நடந்து ஓர் இரு நிமிடங்களில் ஸ்தலத்துக்குப் பொலீஸார் விரைந்தனர். இது சம்பந்தமாக எவரும் கைது செய்யப்ப்வில்லை.

## சிங்கப்பூரின் புதிய வியாபார அலுவலகம் கொழும்பில்

(நமது நிருபர்)

சிங்கப்பூர் அரசு விரைவில் ஒரு வியாபார அலுவலகம் ஒன் றைக் கொழும்பில் திறக்கவுள்ளது. இலங்கைக்கான புதிய உயர்ஸ்தானிகர் லாம் பக் காங் இச் செய்தியை இலங்கை வெளியுறவு அமைச்சர் கமீத்திடம் தெரிவித்துள்ளார். இவ்வாறான அலுவலகம் மூலம் இலங்கையில் முதலீடு செய்யப்படும்போது அது உற்பத்தியை கூட்ட வழிகோலும் என்று கமீத் தெரிவித்தார். சிங்கப்பூர் இலங்கையில் முதலிடும் நாடுகளில் முக்கியமான ஒரு நாடாகும். கடந்த 6 மாத காலத்துள் கொண்டு வரப்பட்ட 2112 திட்டங்களில் 13 சிங்கப்பூர் அரசினால் முதலிடப்படுகிறது.

www.tamilarangam.net



# மதமும் ஞானிகளும் வியாபாரிகளும்: ஜே.கே, ரஜனீஷ் மற்றும் ஸத்ய சாய் பாபா

**யமுனா ராஜேந்திரன்**

மதங்கள் தத்துவம் புரட்சிகர சித்தாந்தம் இவற்றுக்கிடையில் ஒரு ஒற்றுமை உண்டு. மனிதனை துன்பத்தில் இருந்து இருளில் இருந்து விடுவித்து ஒள்நோக்கி முக்தி நோக்கி இட்டுச் செல்லும் நோக்கம் கொண்டவை இவை.

ஆகவேதான் ஜெயகாந்தன் போன்ற சமூகப்பிரக்ஞையுள்ள எழுத்தாளர்கட்கு கார்ல் மார்க்ஸ் இந்திய நோக்கில் மாபெரும் ரிஷியாகவும், விவேகானந்தர் சிவப்புத் துறவியாகவும் தென்படுகிறார்கள்.

இந்த நூற்றாண்டில் மரபு சார்ந்த மார்க்ஸீய நம்பிக்கைகளுக்கு மாறாக மூன்றாம் உலக நாட்டு விடுதலைச் சித்தாந்தத்திற்கு மதம் மாபெரும் நன்கொடையை வழங்கியிருக்கிறது.

ரிகபர்டோ மஞ்சூ எனும் இலத்தீன் அமெரிக்க நோபல் பரிசு பெற்ற பெண்மணிக்கு கத்தோலிக்கம் விடுதலைக்கான ஆயுதமாகிறது.

சுவாமி அக்னிவேஷ்சுக்கு இந்துமத நம்பிக்கை கொத்தடிமைகளை விடுவிக்கும் ஆன்மீக பலமாகிறது.

இந்திய வாழ்க்கை முறையில் ஆழ்ந்த நம்பிக்கையும் இந்து மதத்தில் உள்ளார்ந்த நம்பிக்கை உள்ளவர்க்கும் ஞானவான்களையும் வியாபாரிகளையும் இனம் பிரித்து அறிய இயலும்.

ராமகிருஷ்ண பரமஹம்ஸர் ரமண மகரிஷி அரவிந்தர் விவேகானந்தர் ஆதிசங்கரர் போன்ற ஞானவான்கள் தோன்றிய பூமி இந்தியா. நம் சமீப கால அறிவாளி ஜே.கே (ஜிட்டு கிருஷ்ணமூர்த்தி) வாழ்ந்த தேசமும் அது.

இந்த நாடுதான் திரேந்திர பிரம்மச்சாரி, பங்காரு அடிகளார் (மேல் மருவத்தூர் ஆதிபராசக்தி), ஸத்ய ஸாய் பாபா போன்ற மதவியாபாரிகளையும் அரசியல் சித்து விளையாட்டுக் காரர்களையும் உற்பத்தி செய்திருக்கிறது.

மதம் தனிநபரின் ஆன்மீகத் தேட்டமும் முக்தியும் சந்தோசமும் சார்ந்த விஜயம். மதமும் நிறுவனமும் அரசியலும் இணையும் போது அது வியாபாரச் சதியாகிறது. உயிர்களைப் பலிகொள்கிறது.

எளிமையும் துன்பமும் தேடலும் வேதனையும் நிறைந்த பாதை ஆன்மீகப் பாதை. படோடாபமும் ஜரிகை பீதாம்பரங்களும் நன்கொடைகளில் பெரும் மருத்துவக் கல்லூரிகளும், என்ஜீனியரிங் கல்லூரிகளும் லஞ்சமும் அற்ற வேதனை நிறைந்த பாதை ஆன்மீகப் பாதை.

நம் சமகாலத்தில் இந்தியாவையும் இந்தியாமூலம் உலக நாடுகளின் சிந்தனையையும் பாதித்தவர்கள் இருவர். அவர்கள் ஜே.கிருஷ்ணமூர்த்தியும் ஆச்சார்யா ரஜனீசும்தான்.

இவர்களிருவர் பற்றி ஆழ்ந்து சிந்திப்பவர்க்கே வெவ்வேறு அபிப்பிராயங்கள் இருக்கிறது. இருக்கும்.

மனிதன் நிறுவனமயப்பட்டும் ஒற்றைபரிமான முகத்துடனும் தன் இயற்கைச் சாரமிழந்து வாழும் சூழலில் இவர்கள் பேசும் முறை அர்த்தமுள்ளதாகிறது.

மதிப்பீடுகளற்ற சிந்தனா விடுதலையும், காமத்திலிருந்தும், வன்முறையிலிருந்தும் விடுபடுவதற்கு அதன் எல்லை வரை சென்று அதனூடே அதைக் கடந்து போவதுதான் இருவரது சிந்தனையின் களம்.

சமப்பாலுறவையும் ஆண்கர்வ பெண்கர்வ நிலைப்பாட்டையும் ஏகாதிபத்திய வளர்ச்சியின் தீமையாகக் காண்கிறார் ரஜனீஷ். நாகரீகத்திற்கு எதிராக மேற்கத்தைய நாடுகள் கொடுத்த மாபெரிய தீமையாக இதைக்காண்கிறார்.

நிலவும் சோசலிச சமூக அமைப்பின் அதிகாரத்துவ நிலைப்பாட்டைக் குறித்து ஜாக்கிரதை உணர்ச்சியுடன் இருக்கும்படி எச்சரிக்கிறார் ரஜனீஷ்.

அவர் வாழ்க்கை முறை குறித்து அமைப்புக்கு எதிரான அவரின் அமைப்புகள் சீரழிந்த விதம் குறித்து வேறுபட்ட விமர்சனங்கள் இருக்கக்கூடும்.

இவையனைத்துக்கும் மாறாக ரஜனீஷ் ஒரு நடைமுறை சித்தாந்தவாதி.

நிலவும் அனைத்து விதமான சித்தாந்தங்களையும் சமூக அமைப்பு முறைகளையும் மதிப்பீடுகளையும் கேள்விக்குள்ளாக்கியவர். இப்படி விமர்சிக்கிறவர், வேறுபட்ட மதிப்பீடுகளுக்கு ஆளாவதும் இயல்பு.

அமைப்புகளுக்கு எதிரான ஜே.கிருஷ்ணமூர்த்தினது கல்வி நிறுவனங்கள் அவர் மறைவுக்குப் பின்பு சர்ச்சைக்கும் கேள்விக்கும் உள்ளாவதுடன் அவர் பல பெண்களோடு தொடர்பு கொண்டிருந்தார் என்று வந்திருக்கின்ற புத்தகமும் எந்தவிதத்திலும் மனித விடுதலை குறித்து அவர் எழுப்பிய கேள்விகளை அர்த்தமற்றதாக்கி விடவில்லை.

அனைத்துக்கும் மேலாக உயிர்ப்பலியை மௌனத்துடன் நியாயப்படுத்தும் கொடுங்கோன்மையையும் நிலைநாட்டவில்லை. சாய் பாபா சொல்கிறார் என் மீதிருந்த பொறாமையாலதான இக் கொலை முயற்சி நடந்தது''.

இந்தியா ருடே சொல்கின்றபடி தனது அழிகின்ற உடலைப் பாதுகாக்க சாய் பாபாவுக்கு தெய்வீக சக்திமட்டும் போதுமானதாக இல்லை. மெட்டல் டிடெக்டர்களின் உதவியும் தேவைப்பட்டுவிட்டது. அவர் சார்ந்த நிறுவனங்களில் நடக்கும் லஞ்ச ஊழலும் அயோக்கியத்தனமும் மேல்மட்ட அரசியலும் இந்தியா முழுவதும் அறிந்தவைதான்.

அவர் நடத்தும் வேடிக்கை விளையாட்டுக்கள் குறித்து பி.பி.சி. போல் டானியல் ஷோ நடத்தும் மாஜிக்காரர் போல் டானியலுடன் பேசினால் நம்மால் புரிந்து கொள்ள இயலக்கூடும்.

தற்பொழுது வாழுகின்ற மிக இளம்வயது மாஜிக்காரர் இந்தியாவின் கேரளாவில் வாழும் எட்டு வயது பெண் குழந்தை ஒன்று. இந்தக் குழந்தை குங்குமமும் திரிசூலமும் ஏழு நிறங்களில் கைக்குட்டையும் பூக்களையும் விரல் சொடுக்கி கொண்டு வருகிறது.

இந்த சத்திய சாய் பாபாவை இலங்கையைச் சேர்ந்த டாக்டர் கோவூர் எனும் உளவியலாளர் ஒரே மேடையில் வெகுஜனங்கள் விஞ்ஞானிகள் மற்றும் அறிவாளிகளுக்கு முன்னால் விவாதிக்க அழைத்ததையும் பாபா அதற்கு மறுத்ததையும், இச்சந்தர்ப்பத்தில் நினைவு கூர முடிகிறது.

இந்தியாவின் பிரதமர் நரசிம்மராவ் துணை ஜனாதிபதி இந்திராகாந்தி கொலை வழக்கில் கொலை காரனுக்கு வாதிட்ட நான்கி பல்கிவாலா போன்ற அரசியல்வாதிகள் பெரும் பணக்காரர்கள் கொழும்புத் தமிழர்கள் வசதிபடைத்த தம்தேசத்தை மறந்த லண்டன் தமிழர்களின் தெய்வம் பாபா. லண்டனில் இருந்து வெளிவரும் சில்வர் அரோ பத்திரிகை பாபா பற்றி எழுதும்போது பாபாவுக்கு சாவு என்பதே இல்லை என்று எழுதுகிறது. கடவுளின் அவதாரம் என்கிறது. இதுவரையிலான எல்லா ஞானிகளும் பூமியில் பிறந்து கடவுள் தன்மை எய்த முயன்றவர்கள், ஆனால் பாபா மட்டும்தான் கடவுளாகவே பூமியில் அவதரித்தார் என்கிறது அப்பத்திரிகை.

அகந்தையும் தலைக்கனமும் சார்ந்ததொரு அறிக்கை இது. ஏசுவோ நபிகள் நாயகமோ புத்தனோ ஆதிசங்கரரோ இம்மாதிரி அகந்தையை கடந்த ஆன்மீக ஞானிகள். கடவுளைத் தேடிய எந்த மனிதனும் நான் கடவுளின் அவதாரம் என்றதில்லை. சகமனிதனைப்பார்த்து உனக்குள் உண்டு கடவுள் என்றுதான் சொல்கிறார்கள்.

தனிமனிதனுக்கு உணவிலை எனில் ஜகத்தினை அழித்திடுவோம்'' என்று பாரதிமாதிரி வறுமைமீது கோபமுற்று மதத்தை விமர்சிக்கும் விவேகானந்தர்கூட கடவுள் வறுமையை ஒழிப்பதில் உண்டு என்கிறார்.

குங்குமமும் திரிசூலமும் ஆப்பிளும் வரவழைக்கும் பாபா கைப்பிடிச்சோறேனும் வரவழைத்து பட்டினியில் தினம் சாகும் கோடானுகோடி குழந்தைகளுக்கு தரமுடியுமானால் அவர் குறைந்த பட்ச தெய்வீகத்தன்மையையாவது எய்த முடியும்.

வறுமையும் பிணியும் வேதனையும் போர்களும் இனக் கொலைகளும் சிசுக்கொலையும் நிறைந்த இவ்வுலகை பாபாவின் மந்திரம் மாற்றமுடியுமானால் நிச்சயமாக பாபா கடவுள்தான்.

இதை பாபா மாற்ற இயலாதெனில் பிரசாந்திநிலைய உயிர்க்கொலைகளும் பாபா போன்றவர்களின் முகத்திரைகள் கிழிவதும் தவிர்க்கவியலாத விதிகளாகவே இருக்கும்.

பாபாவின் சீடர்களுக்கும் பக்தர்களுக்கும் இந்தியப்பிரதமருக்கும் நாணி பல்கிவாலாவுக்கும் எமது ஆழ்ந்த அனுதாபங்கள். ■

## அகதிகள் திரும்பினர்

இந்தியாவில் இருந்து இன்னுமொருபகுதி அகதிகள் இலங்கை திருகோணமலைக்கு கப்பல் மூலம் கொண்டுவரப்பட்டனர். கடந்த 17ந் திகதி தென் இந்தியாவில் இருந்து 1131 அகதிகள் இவ்வண்ணம் திருமலைத் துறைமுகத்தை வந்தடைந்துள்ளனர். இவர்கள் வவுனியா, கிளிநொச்சி, முல்லைத்தீவு யாழ்ப்பாணம் பகுதிகளில் இருந்து இடம் பெயர்ந்து இந்தியாவுக்கு அடைக்கலம் புகுந்தவர்கள் என்பது இங்கு குறிப்பிடத்தக்கது. இவர்களுடன் பல யு.என்.எச்.சி.ஆர். பிரதிநிதிகளும் இவர்களை மீளக்குடியமர்த்துவது சம்பந்தப்பட்ட நடவடிக்கைகளை மேற்கொள்ளும் நோக்குடன் வந்துள்ளார்கள். யு.என்.எச்.சி.ஆர். மேற்கொள்ளும் இம்மீளக்குடியமர்த்தும் முயற்சியில் மேலும் பல அகதிகள் குறிப்பாக தென்னிந்தியாவில தங்கியிருப்பவர்கள் வெகுவிரைவில் கப்பல்களில் கொண்டுவரப்படுவர் என மீளக்குடியமர்த்தும் அதிகாரிகள் பத்திரிகையாளர்களிடம் தெரிவித்துள்ளனர்.

நிலைமைகளை உன்னிப்பாக அவதானித்துவரும் யு.என்.எச்.சி.ஆர். சுவிஸ் நாடு முன்வைத்துள்ள அகதிகளை மீளக்குடியமர்த்தும் திட்டத்தை எவ்வாறு நடைமுறைப்படுத்தலாம் என சிந்தித்து வருவதாக அவதானிகள் கருத்து தெரிவித்துள்ளனர். இதற்கான திட்டம் ஒன்றை தயாரிக்க பல கோடி ரூபாய்களை சுவிஸ் அரசு யு.என்.எச்.சி.ஆர். இடம் கொடுக்கவும் தயாராக உள்ளதாவும் அறியமுடிகிறது. பல ஆதாரபூர்வமற்ற தகவல்களின்படி சுமார் 400 சுவிஸில் வசிக்கும் இலங்கை அகதிகளுக்கு இது சம்பந்தமாக சுவிஸ் அரசு உத்தியோகபூர்வமற்ற சில கட்டளைகளை அனுப்பியுள்ளதாக அறியக்கூடியதாக உள்ளது.

இந்தியாவில் இருந்து திரும்பிவந்த அகதிகள் மீளக்குடியமர்வு வெற்றியாகும் பட்சத்தில், சுவிஸ் முதலான பல ஐரோப்பிய நாடுகள், யு.என்.எச்.சி.ஆர். ஐ இலங்கை அகதிகளை மீளக்குடியமர்த்துவது சம்பந்தமாக வேண்டிநிற்கும் என்பதில் ஐயமில்லை.

www.tamilarangam.net



# தகுதியில்லாத மாப்பிள்ளை

சிறுகதை

நாளைய திருமணப் பேச்சு சரிவந்துவிடும் என்பதில் எனக்கு நம்பிக்கை இருந்தது. பெண் வீட்டார் எங்கள் வீட்டுக்கு வர சம்மதம் தெரிவித்ததுமே எனக்கு கலியாணம் நடந்து முடிந்தது போன்ற பிரமை.

இலங்கை மாதிரி இங்கு பெண்கள் பார்ப்பது கடினம். விமான நிலையத்தில் வைத்தே வருகிற குமர் எல்லாம் கரை சேரும்போது நாட்டுக்குள் திருமணப்பேச்சு என்றால்....

எனக்கு தாய் தகப்பன், கூடப்பிறந்த சகோதரங்கள் எல்லாரும் உண்டு. ஆனால் அவர்கள் ஒருவரும் லண்டனில் இல்லை. வைத்திருந்த ஆடு மாடுகளையும், மூத்தக்காவுக்கு சீதனத்துக்கு என்று வைத்திருந்த நகை நட்டெல்லாம் விற்றுத்தான் லண்டன் வந்தனான்.

'டோல் மணி'யும் எடுத்துக் கொண்டு பெற்றோல் ஸ்ரேசனில் பலிலையும், இராத்திரி பேக்கரியிலையும் தும்படிச்சதாலை ஒரு மாதிரி இரண்டு சகோதரிகளுக்கும் பிள்ளை குடுக்கிற மாதிரி இரண்டு பேரை அப்பா அங்கை பிடிச்சு கட்டி வைச்சிட்டார்.

அதிலை ஒருத்தன் மலடணாம். அம்மாவுக்கு ஒரே கவலை என்று இளையவன் அடிக்கடி கடிதம் எழுதுவான். லட்சக் கணக்கில காசு குடுத்தும் தங்கச்சி பிள்ளை இல்லாமல் இருக்கிறால் எண்டு நினைச்சால் எனக்கும் கவலைதான்.

அப்பருக்கும் வயது போட்டுது. பூவரச மரத்தடியிலை கள்ளச் சாராயம் விற்கும் கந்தனையும் இயக்கம் சுட்டபிறகு அப்பருக்கு சாராயம் ஒரு பெரிய பிரச்சனையாம். சாராயம் குடிக்கவே ரவுணுக்கு அடிக்கடி போய்வாறார். ஆமி எப்ப...... அம்மா என்னிடம் புகார்.

குடும்பத்தை கலியாணம் கட்டினாலும் நான்தான் பார்க்கவேணும். தம்பியாக்கள் சின்னப்பெடியள். கட்டிற பொம்பிளையை விசாரிச்சு செய்தம்பி''. அம்மா எனக்கு போனவாரம் எழுதின கடிதத்தில எழுதிய அறிவுரை அது.

புறோக்கர் ஒரு நல்ல மனுசன். கொஞ்சம் காசு விடயத்திலை கறார். ஒரு நூறு பவுணை கூடத்தள்ளினால் என்னிடம் இல்லாத குணத்துக்கெல்லாம் சான்றிதழ் தன்னால வரும்.

நான் லண்டனுக்கு வந்த நாள் முதல் எனக்கு உதவி செய்த என் அறை வாசி தான் எல்லாப் பொறுப்பும். பாவம் அவன். என் கலியாணப் பேச்சிற்காக இண்டைக்கு வேலையும் 'கட்'.

வந்த புதிதில் அவனை எனக்கு தெரிந்த ஒருவரைக் கொண்டு விமான நிலையத்தில் எடுத்து விட்ட விசுவாசமோ தெரியாது. எனக்கென்றால் உயிரையும் விடுவான்.

நான் புறோக்கரிடம் சொல்லியிருக்கிறன். நான் பத்தாம் வகுப்பு மட்டும்தான் படிச்சனான். அதுவும் இரண்டுபாடம்தான் பாஸ். இங்கிலிஸ் நல்லா கதைக்க வராது. பேக்கரிதான் பிரதான வேலை எண்டு, முழு உண்மையையும் சொல்லச் சொல்லி.

சீதனம் ஒண்டும் எனக்கு வேண்டாம். என்ரை சகோதரங்களுக்காக நான் பட்ட கஸ்டம் அந்த பெண்ணைப் பெத்தவங்கள் பட வேண்டாம். எனக்குத்தான் வீட்டுப்பிரச்சினை எல்லாம் முடிஞ்சிட்டே. அதலை ஒரு சதம் காசு வாயாலை கேட்க் வேண்டாம் எண்டு அடிச்சு சொல்லிட்டன்.

பொம்பிளை கொஞ்சம் வடிவாய் இருக்க வேணும் எண்டு சொன்னனான்தான் நானும் கொஞ்சம் கறுப்புதான். கறுவல் மாதிரி இல் லை. கட்டிறவளும் கறுப் பெண்டல் ...... அதுதான் கொஞ்சம் சிவப்பியாய் பார்க்கச் சொன்னான்.

அம்மாவுக்கும் ஒரே ஆசை. குடும்பத்துக்காக சின்னவயசில இருந்து கஸ்டப்பட்ட நான் ஒரு நல்ல இடத்தில கலியாணம் செய்யவேணும் எண்டு. அதுக்காக பாலையடி வைரவருக்கு மடை வைக்கவும் நேத்திகூட வைச்சிருக்கிறன் எண்டு எழுதினவ. தாய் மாருக்கு பிள்ளையலிலை எவ்வளவு அன்புதான்....



லண்டனுக்கு வந்த உடனை முரு கேசுவின் மூத்தது தோடும் போட்டுக் கொண்டு தலையையும் ஒரு சாதி யாய் நீட்டிவிட்டுக்கொண்டு திரியிறானே. அதுவும் அருமந்த ரவு சரை கிழிச்சு விட்டிட்டு பெற்றோல் ஸரேசனில் கள்ளக் காட்டுப் போட்டு எடுத்த காசிலைகாரும் ஆறாம். இவனுக்கெல்லாம் பாசம் இல்லையோ எண்டு சிலவேளை யோசிக்கிறதுண்டு. அந்த தாய் எல்லாம் எவ்வளவு வேதனைப் படுங்கள்.

வீட்டு கதவு மணி கணீர் எண்டு சத்தம் போடுது. புறோக்கரும் பெண்வீட்டாரும்தான்.

எனக்கு சற்று வெட்கம் வந்தது. நான் நண்பனையே எல்லாவற்றையும் பேசி முடிவெடுக்கும்படி சொல்லிவிட்டேன்.

எனக்கு ஏற்கெனவே மூண்டு இடத்தால சம்பந்தம் வந்தது நண்பனுக்கு தெரியும்.

முதலிரண்டும் படிப்புக்காணாது எண்டு சொல்லிட்டினம். மூன்றாவது ஆள், பார்த்தால் எரிச்சகரிமாதிரி இருக்கிறனாம். நான் என்ன செய்ய. எனக்குப் படிக்க ஆசை இருந்ததுதான். வசி இருக்க வேணும். லண்டனிலை வசதி இருக்குது. ஆனால் பாசை விளங்குதில்லை. வந்து ஐந்து வருடம் ஒழுங்காய் விளங்குதுமில்லை. கதைக்கவும் ஏறுதில்லை இந்த லச்சணத்திலை எப்படிப்படிக்கிறது.

சொல்லும்போது கவலையாய் தான் இருந்தது. நாளடைவில் மனதைத் தேற்றிக் கொண்டேன். அவனுக்கு கலியாணம் எண்டல் இஸரம் இல்லை வேண்டாம் வேண்டாம் எண்டு சொல்லுகிறவன்'' இப்பகூட இதெல்லாம் வேண்டாம் எண்டவன் நான்தான் ஏசிப்போட்டு........

எனக்கு அவனுக்கு பல்லு உடைக்க வேண்டும்போல் இருந்தது. நான் எப்போது சொன்னேன் வேண்டாம் எண்டு.

கேக்கிறன் எண்டு குறை விளங்கப்படாது பொடியன் என்ன மாதிரி படிப்பு....?''

அவன் ஊரிலை ஏ.லெவல் படிச்சவர். இங்கைவந்து கொஞ்சக்காலம் படிக்கேல்லை இப்ப 'பார்ட்டைம்'ஆய் ஒரு டிகிரிக் கோர்ஸ் செய்யிறான். நண்பன் புழுகிறான்.

எனக்குத் தலை விறைக்கத் தொடங்கியது. பொய் பொய்யாய் சொல்லுறானே.

பேச்சுக்கள் தொடர்ந்தன. அறையினுள் இருந்த எனக்கு அரையும் குறையுமாக அடிக்கடி ஏதோ கேட்டது. நான் முதலிரவு வரை சென்று விட்டேன்.

அவன் தண்ணி தொட்டதே இல்லை'' ஒவ்வொரு நாளும் நானும் அவனும் பியர் ஒரு கான் அடிக்காமல் சாப்பிடுறதே இல்லை. பச்சைப் பொய் சொல்லுறான் பாவி எனக்குள் திட்டிக் கொண்டேன்.

'ஏ.லெவல்' என்ன படிச்சவர்?

அவர் ஏ.லெவல் 'பயோ' படிச்சவர். 'கிண்டுக் கொலிஜ்'தான்..... நண்பன் வெழுத்துக் கட்டினான்.

எனக்கு 'பயோ' என்றால் என்னென்ன பாடங்கள் உண்டு. 'கிண்டுக் கொலிஜ்' எங்கே உண்டு எதுவுமே புரியவில்லை.

நான் விசேடமாய் செய்த ரீயையும் 'ஜவ்னா வுஸ்' கடையில் வாங்கிய வடையையும் புறோக்கர் முன்னிலையில் வைத்தான் நண்பன்.

நண்றாக வெழுத்துக் கட்டினார்கள். பெட்டையின் தமையனாம். புறோக்கருடன் வந்தது. நல்ல நிறமாய் இருந்தான். தங்கையும் அப்படியே இருக்க வேண்டும் மனதுக்குள் கோட்டை வளர்ந்தது.

வடை எங்கே வாங்கினீர்கள்'' சம்பிரதாயத்துக்கு ஒரு கேள்வி கேட்டவாறே இன்னொரு வடையைக் கவ்வினான் புறோக்கர்.

அண்ணன்காறனும் விடவில்லை. போட்டி போட்டாற்போல் வாட்டி எடுத்தனர். எனக்கு வீணீர் வடிந்தது. ஒரு சரி செய்து கொண்டேன்.

எங்கை போய் வரச்சொல்லும்''

நேரடி இன்றவியூ........ முன்னால் போய் லண்டன் பாணியில் ஹலோ எண்டுவிட்டு ஒரு கதிரையில் அமர்ந்தேன். ஏதாவது பாடங்களைப்பற்றி கேட்டால்..... என்ற போது நெற்றியில் வியர்வை துளிர்த்தது.

அண்ணன்காரன் சட்டுப்புட்டென்று ஆங்கிலத்தில் விளாசினார். ஒண்டு ரண்டு சொல்லைப் பிடித்து தமிழிலேயே பதிலுறுத்தேன்.

நண்பனும் இடையிடையே புகுந்து விளையாடினான். கொஞ்சம் ஆறுதலாக இருந்தது. பேச்சுக்கள் முடிந்தது. வந்தவர் விடைகண்டனர். போனவர்கள் முடிவுவரும்வரை அணில் ஏற விட்ட நாய்போல் 'போன்' அருகிலேயே இருந்தேன்.

தொலைபேசி அலறியது. பாயந்து விழுந்து எடுத்தேன். அது பிழையான இல.... கோபம் தூசணமாக பேச மனசுக்குள் வந்தது. திட்டிக்கொண்டேன். மறுபடி மணி அடித்தது. இந்த முறை நண்பன் எடுத்தான். முகம் கறுத்தது. அவன் குரல் தடுதடுத்தது.

போனை வைத்துவிட்டு அமைதியாகச் சொன்னான் இந்த 'புறப்போசலும்' சரிவரவில்லை. நீங்கள் அகதியாய் வந்தனீங்களாம். அவர்கள் பிறிட்டிஷ் சிற்றிசனாம். அகதியாய் வந்த 'ரெம்பரறி' காரருக்கு கட்டிக்குடுக்க விருப்பமில்லை.......

'எலாம்' மணிக்கூட்டை ஒரு மணிக்கு பிடித்து விட்டுவிட்டு போத்திக் கொண்டு படுத்தேன். நினைவுகள் 'சிக்னல்' பழுதான சந்தியில் வாகனங்கள் பொவது போல் ஓடிக்கொண்டிருந்தது.

**பாலன்**

# மலையக மக்கள் முன்னணித் தலைவர்களின் வழக்கு விசாரணை - ஓர் அலசல்

பயங்கரவாத தடைச்சட்டம், அவசரகால சட்டம் ஆகிய இரு மனித உரிமை மீறல் சட்டங்களும் ஜனநாயகத்தை மாத்திரமல்ல நீதித்துறையின் சுதந்திரமான செயற்பாடுகளையும்கூட வெகுவாகக் கட்டுப்படுத்தி, அதிகாரத்திலிருக்கும் அரசாங்கத்தின் அரசியல்



பி.ஏ.காதர்

விருப்பு வெறுப்புகளையும் நோக்கங்களையும் நிறைவேற்றிக் கொள்ளும் கருவியாக நீதித்துறையை, தரமிழக்கச் செய்கின்றன.

அதிகாரத்துஷ்பிரயோகங்களுக்கு அஞ்சாமல் துணிச்சலுடன் சில முதுகெலும்புள்ள நீதிபதிகள் செயற்படும் போது நீதித்துறைக்கும் அரசியல் அதிகார துவஷ்பிரயோகத்திற்கும் இடையிலான இழுபறி வெளிச்சத்திற்கு வருகிறது.

சில நீதிபதிகளை அரசு தனது கைக் கூலிகளாக மாற்றிக் கொண்டுள்ள நிலைமையை சில பிரசித்திபெற்ற அரசியல் வழக்குகள் படம் போட்டு காட்டியுள்ளன.

ஜனாதிபதி தேர்தல் ஆட்சேபனைமீது விசாரணை நடத்திய பல சுப்ரீம் கோர்ட் நீதிபதிகளின் செயற்பாடுகள் இதற்கொரு உதாரணம்.

லலித்-காமினி கோஷ்டியினர் ஐ.தே கட்சியிலிருந்து வெளியேற்றப்பட்டதை ஆட்சேபித்து மஜிஸ்திரேட் நீதி மன்றமொன்றில் சமர்ப்பிக்கப்பட்ட மனு நிராகரிக்கப்பட்டதும், அதனை நிராகரித்த நீதிபதிக்கு உடனடியாக பதவியுயர்வும், ஜப்பான் விஜயமொன்றுக்கான இலவச டிக்கற்றும் அரசால் வழங்கப்பட்டமையும் இதற்கு மற்றுமொரு உதாரணம்.

மறுபுறத்தில் அரசியல் அதிகாரத்திற்கு தலைவணங்காமல் நீதித்துறையின் தனித்துவத்தைப் பாதுகாப்பதற்காக பாடுபடும் துணிவுள்ள நீதிபதிகளின் செயல்களைப் பாராட்டாமல் இருக்க முடியாது.

'அத்த'' பத்திரிகைக்கு எதிராக பிரேமதாச அரசு தொடுத்த வழக்கில் பல்வேறு நிர்ப்பந்தங்களைப் பொருட்படுத்தாமல் தீரத்தோடு தீர்ப்பு வழங்கிய மேல்நீதிமன்ற நீதிபதி டி.பி.வீரசூரியாவின் பாரபட்சமின்மையை இலங்கையின் சுதந்திரபத்திரிகைகள் யாவும் பாராட்டின.

இந்த நியாயஸ்தரின் முன்னிலையில் தான் தற்போது மலையக மக்கள் முன்னணித் தலைவர் பெரியசாமி சந்திரசேகரனின் வழக்கு விசாரணை நடைபெற்று வருகிறது. அரசியல் நிர்ப்பந்தங்களுக்கு அஞ்சாத நேர்மையுள்ள தைரியசாலி என்று நீதித்துறை வட்டாரங்களால் பாராட்டப்படும் மேல்நீதிமன்ற நீதிபதி திரு.சி.வி. விக்னேஸ்வரன் முன்னிலையில் ம.ம.முன்னணியின் செயலாளர் நாயகம் பாவா அப்துல் காதரின் வழக்கு விசாரணை நடைபெற்று வருகிறது. ம.ம.முன்னணியின் உப தலைவர் வீ.டி.தர்மலிங்கம் மீது தொடரப்பட்டுள்ள வழக்கு மேல் நீதிமன்ற நீதிபதி லெஸ்லி அபேசேகர முன்னிலையில் 25-8 ந்திகதி விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்படவுள்ளது.

### மலையக மக்கள் முன்னணித்தலைவர் பெ.சந்திரசேகரின் வழக்கு


சந்திரசேகரன் கடந்த மாகாணசபை தேர்தலில் சிறையிலிருந்த வண்ணம் போட்டியிட்டு வெற்றி பெற்றார். இதன் மூலம் இத்தகைய தேர்தலில் சிறையிலிருந்து முதன் முதலாக வெற்றி பெற்றவர் என்ற அந்தஸ்தைப்பெற்றிருக்கிறார்.

இவரது வழக்கை விசாரணை செய்த கொழும்பு மேல் நீதிமன்ற நீதிபதி திரு.டி.பி.வீரசூரிய தற்போது பானதுறை மேல் நீதிமன்றத்திற்கு இடமாற்றம் செய்யப்பட்டுள்ளதால் இவ்வழக்கில் ஒரு தேக்க நிலைமை ஏற்பட்டுள்ளது.

இதுவரை இவரைக் கைது செய்ததாகக் கூறப்படும் பொலிஸ் இன்ஸ்பெக்டர் தேவசுரேந்திர உட்பட மூவரின் சாட்சிகள் பூர்த்தியாகியுள்ளன.

இவ்வழக்கை தொடர்ந்து விசாரணை செய்வது யார், புதிதாக வந்திருக்கும் நீதிபதி தர்மதாச ஜயவிக்கிரமவா அல்லது இடமாற்றம் பெற்று சென்றிருக்கும் நீதிபதி வீரசூரியவா என்ற இழுபறி இப்போது முடிவுக்கு வந்துள்ளது. தொடர்ந்தும் நீதிபதி வீரசூரிய அவர்களே இவ்வழக்கை விசாரிப்பது என்று தீர்மானிக்கப்பட்டுள்ளது. இதன்படி இவ்வழக்கு கொழும்பிலிருந்து பானதுறை மேல் நீதிமன்றத்திற்கு மாற்றம் செய்யப்பட்டுள்ளது. வழக்கு விசாரணை அக்டோபர் 12, 13 ஆகிய இரு தினங்களில் நடைபெறும்.

இது இவ்வாறிருக்க சந்திரசேகரனை, மாகாணசபை உறுப்பினர் என்ற முறையில் தமது பொறுப்புகளை நிறைவேற்றக்



பி.சந்திரசேகரன்

கூடிய விதத்தில் பிணையிலே விடுதலை செய்ய வேண்டும் என, இவர் சார்பில் சட்டத்தரணிகள் எ. விநாயகமூர்த்தி, எ.டபிள்யூ.யூசுப் ஆகியோரின் அனுசரணையோடு ஆஜரான ஜனாதிபதி சட்டத்தரணி ஆர்.ஒபேசேகர மனு ஒன்றை சமர்ப்பித்தார்.

இம் மனுமீதான விவாதம் 7-7-93 ல் மேல் நீதிமன்ற நீதிபதி தர்மதாச ஜயவிக்கிரம முன்னிலையில் நடைபெற்றபோது அரசதரப்பு சிரேஷ்ட சட்டத்தரணி விஜித்த மலல்கொட கூறியதாவது:

பிரதிவாதி பாதுகாப்பு அமைச்சின் செயலாளரினால் கையொப்பமிடப்பட்ட தடுப்புக்காவல் கட்டளையின்படி தடுத்து வைக்கப்பட்டிருப்பதால் அவரை விடுதலை செய்யும் அதிகாரம் சட்டமா அதிபர் திணைக்களத்திற்கு கிடையாது. எனவே பாதுகாப்புச் செயலாளர் தடுப்புக்காவல் கட்டளையை வாபஸ் பெற்றால் தமமால் பிணையைப் பற்றி பரிசீலனை செய்ய முடியும்''

அப்போது கருத்து தெரிவித்த நீதிபதி:

பாகிஸ்தான் அரசினால் சிறையிலே இருந்த பெனாசிர் பூட்டோவின் கணவர் அரசியலில் ஈடுபடக்கூடிய விதத்தில் பிணையிலே விடுதலை செய்யப்பட்டுள்ளார். இதனை முன்மாதிரியாக் கொண்டு மக்களால் தெரிவு செய்யப்பட்ட பிரதிநிதி என்ற முறையில் அவர் தனது பொறுப்புகளை நிறைவேற்றுவதற்கு வசதியாக, பிணை மனுவை சட்டமா அதிபர் திணைக்களம் பரிசீலனை செய்ய வேண்டும்'' எனக்குறிப்பிட்டார்.

எனினும் பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் சந்திரசேகரனின் பிணை மனுவை நிராகரித்துள்ளார். இருப்பினும் மாகாணசபை உறுப்பினராக சத்தியப்பிரமாணம் செய் வதற்கும், அதன் கூட்டத் தொடர்களில் கலந்து கொள் வதற்கும் பொலிசாரின் பாதுகாப்பில் செல்லலாம் என அறிவித்துள்ளார்.

இதற்கு மலைய மக்கள் முன்னணியின் பதில் பொதுச்செயலாளர் ஜெயபாரதி: மாகாணசபை உறுப்பினர் என்ற முறையில் மக் களுக்கு நல்ல சேவை களை செய்வதற்கு வாய்ப்பளிக்காமல் வெறும் கூட்டத் தொடர்களில் கலந்து கொள்வதில் எவ்வித பயனும் இல்லை. முன்னாள் பிரதி பொலிஸ் மா அதிபா உடுகம்பொலவை பிணையில் விடுதலை செய்ததைப் போன்று எமது சிறையிலிருக்கும் மூன்று தலைவர்களையும் விடுதலை செய்யுங்கள்'' என பதில் அளித்துள்ளார்.

இதற்கிடையில் ஸ்ரீ.ல.சுதந்திரக் கட்சி, ஜனநாயக ஐக்கிய தேசிய முன்னணி, கம்யூனிஸ்ட் கட்சி, நவசமசமாஜ கட்சி போன்ற பல எதிர்க்கட்சிகளின் பிரதிநிதிகள் ஒன்றுகூடி சந்திரசேகரனை பிணையில் விடுதலை செய்யா விட்டால் நாடுமுழுவதும் பிரச்சாரக்கூட்டங்கள் நடத்தப் போவதாக எச்சரிக்கை விடுத்துள்ளன.

இவற்றிற்கெல்லாம் பதிலளிக்கும் தோரணையில் அமைச்சர் தொண்டமான் த ஐலண்ட்'' பத்திரிகைக்கும் லங்காதீப'' பத்திரிகைக்கும் இது தொடர்பாக பேட்டியளித்துள்ளார். அவற்றில் தேர்தலில் போட்டியிடுவதை சிறையிலிருந்து விடுதலை பெறுவதற்கான ஒரு குறுக்கு வழியாக எவரும் கருதக்கூடாது. இன்று வழக்கு விசாரணை எதுவுமின்றி நூற்றுக்குமேற்பட்ட அப்பாவி மலையக இளைஞர்கள் தடுத்து வைக்கப்பட்டுள்ளனர். அவர்களோடு ஒப்பிடுகையில் வரதனுக்குப் புகலிடம் கொடுத்தார் என்ற பாரதூரமான குற்றச்சாட்டுக்குள்ளாகி இருக்கும் சந்திரசேகரனின் நிலைமை பரவாயில்லை. அவர்மீது வழக்கு தொடரப்பட்டுள்ளது'' எனக் கூறியுள்ளார்.

மலையக மக்கள் முன்னணியின் தலைவர்கள் இரு வருடங்களுக்கு மேலாக பிணை மறுக்கப்பட்ட நிலையில் தடுத்து வைக்கப்பட்டிருப்பதற்கு தொண்டமானே காரணம் என்ற குற்றச்சாட்டு இப்போது வலுப்பெற்று [illegible]ச்சரும் ஜனநாயக ஐக்கிய தேசிய முன்னணியின் தலைவருமான காமினி திசநாயக்கா தொண்டமான் மீது பகிரங்கமாக இக்குற்றச்சாட்டை சுமத்தியுள்ளார்.

காந்தியவாதி என தன்னைப் பிரகடனப்படுத்திக் கொண்டுள்ள தொண்டமானின் இந்தக் கூற்று ஜனநாயக பாரம்பரியங்களைக் கேலி செய்வதாக அமைந்துள்ளது. ஜனநாயக அரசியலில் போட்டி இருக்கலாம் ஆனால் பொறாமை இருக்கக் கூடாது.



வி.ரி.தர்மலிங்கம்

நியூரெக் அச்சகம்
திருமண அழைப்பிதழ்கள் மற்றும் உங்கள் சகல விதமான பலவர்ண வேலைகளுக்கும் நாடுங்கள்
1083 ஹரட் லேன், சூட்டிங். தொலைபேசி 081-672 7113

www.tamilarangam.net



# உனக்குத் தெரியுமா?

கடவன்




எமது நாட்டிலே இடத்திற்கு இடம் தொழிற்கு தொழில் சீதனத்தொகையில் மாறுதல் ஏற்படுவது போல் இப்போது தமிழர்கள் தமது சொந்த நாட்டைவிட்டு வெளிநாட்டுக்கு அகதிகளாக வந்துவிட்ட காரணத்தாலோ என்னவோ பிரதேச தொழிலில் அடிப்படைமாறி நாட்டுக்கு நாடு விசா அடிப்படையில் சீதனத்தொகை மாற்றமடைகிறது. மனிதவாழ்வில் மிக முக்கிய பழக்கங்களில் தலைசிறந்ததாக இருப்பதும் புனிதமானதும் திருமணம் ஒன்றுதான். இல்வாழ்க்கை இன்றி மனித குலம் முன்னேற்றம் ஏற்படாது. குடும்ப வாழ்க்கை இல்லாது வாழ்க்கைக்கு சுவையே கிடையாது. நமது மூதாதையர்கள் ஆயிரமாயிரம் ஆண்டுகளுக்முன் விட்டுச் சென்ற சடங்குகளும் சமுதாயவரையறைகளும் பலபல, அவற்றில் இன்னும் வாழ்ந்து கொண்டிருப்பது சிலமட்டுமே அவைகள் சமுதாய முன்னேற்றத்தின் கலங்கரை விளக்குகள் என்று கருதுவதைவிட அவை சமுதாயத்தின் புற்றுநோய்கள் என்றே கூறவேண்டும். அவற்றில் ஒன்றுதான் வளர்ந்துவரும் சீதனக்கொடுமை.

மனிதன் மண்ணிலிருந்து விண்ணுக்குச் சென்ற காலம் மாறி இன்று விண்ணிலே வீடு அமைத்து குடிவாழும் அளவிற்கு விஞ்ஞானமும் மக்கள் வாழ்வும் வளர்ந்துவிட்ட இந்த நேரத்திலும் எமது சமுதாயத்தைப் பிடித்துள்ள சீதனம் என்கின்ற தொற்று நோய்க்கு இன்று வரை எவராகிலும் மாற்று மருந்து கண்டுகொள்ள முடியவில்லை, இது வெறும் நோய்க்கிருமிகளால் ஏற்படுத்தப்பட்ட தொற்று நோயெனில் இன்று விண்ணில் இருந்துகொண்டு பல நோய்களுக்கு மாற்று மருந்துகளை ஆராய்ச்சி செய்து கொண்டிருக்கும் விஞ்ஞானிகளின் உதவிகளையாகிலும் பெற முயற்சிசெய்யலாம். ஆனால் இது எமது சமுதாய உள்ளங்களிலே உறைந்துவிட்ட தொற்று நோய் இதை படிப்படியாக நாமே அழிக்க வேண்டும்.

நாட்டிலே இருக்கும் வரை இது சமுதாயத்தின் பொருளாதார வறுமையினால் ஏற்பட்ட தொற்று நோய், இது சமுதாயத்தின் பொருளாதார நிலைமைகள் மாறும் போது இவையும் படிப்படியாக அழிக்கப்பட்டுவிடுமென பலர் கனவுகண்டனர். அவர்களுடைய கனவிலே ஒன்றுதான் பலித்தது. சமுதாய பொருளாதாரத்தில் முன்னேற்றம் ஆனால் தொடரும் சீதனக் கொடுமைக்கு முடிவே இல்லை. இது ஆசியாவல் இருந்து இப்போ ஐரோப்பா அமெரிக்கக் கண்டங்களுக்கும் பரவுகிறது.

இதனுடைய கொடிய துன்பத்துக்கு பெண்கள் சமுதாயமே பலியாகிக் கொண்டு போகின்றனர். வாழ்க்கையின் அர்த்தத்தைக் இளமைக்காலங்களிலேயே பீடித்துக்கொள்கிறது. குறிப்பாக பெண் குழந்தை பிறந்துவிட்டால் அக் குடும் அங்கத்தவர் அனைவரும் இந்நோய்க்கு உரியவர்களாகி விடுகின்றனர். இது குடும்ப த்தலைவன் தொட்டு கடைசிக் குழந்தைவரை நாளும் பொழுதும் படிப்படியாக அவர்களை துன்பத்தின் பாதாளத்துக்கே தள்ளுகிறது.

மன்னர் ஆட்சிக் காலங்களில் மக்கள் மத்தியிலேயே பெரியார், சிறியார் என்ற வேறுபாடு அவர்கள் வசம் இருந்த உடமைகளின் அடிப்படையிலேயே அளவிடப்பட்டது. இக்காலப்பகுதியில் சீதனம் என்ற முறை கடைப்பிடிக்கப்பட்டலும் கூட இப்போது உள்ள பெரிய அளவில் இருக்கவில்லை. அந்தக்காலப் பகுதியில் நிலத்தையும், பொருள் பண்டங்களையும் கொடுத்தே திருமணம் செய்தனர். அந்நிய ஆட்சியாளர்கள் எமது நாடுகளுக்குள் புகுந்த பின்பு மக்கள் மத்தியிலே அரச உத்தியோகத்தர்கள் என்ற புதிய பிரிவு உருவாகத் தொடங்கியது. இதனால் வெறும் ஆண், பெண் என்றிருந்த ஏற்றத்தாழ்வு இப்போ மற்றுமொரு புதிய பிரிவையும் உள்ளடக்கியதாக மாறியது.

இவைகளின் வளர்ச்சி கூடக்கூட அதே காலப் பகுதியில் பெண்கள் தம்மை அரச உத்தியோகத்தினுள் சேர்த்துக்கொள்ள முடியாத சமுதாயக் கட்டுப்பாடு என்ற காரணத்தாலும், ஆண்களின் தகமையும், தரமும் உயர்ந்து விட்டதாக எமது தமிழ் சமுதாயம் கணித்துக்கொண்டது. திருமணம் என்று பேச்சு எடுத்த வுடனேயே அரச உத்தியோக ஆண்களுக்கே முதலிடம் வழங்கப்பட்டது. இதை ஒரு வாய்ப்பாகப் பயனபடுத்தி அரச உத்தியோக ஆண்களும். அவர்களின் பெற்றோரும் சீதனத் தொகையில் மாறுதல் கொண்டு வந்தனர். அத் துடன் பண்டமாற்று முறை படிப்படியாக அழிக்கப்பட்டு பணப்புழக்கம் சமுதாயத் தில் வளரத் தொடங்கியது. நிலமும் பண்டங்களுமாக இருந்த இந்த முறை பின் நிலமும், பொன்னும், பொருளுமாக மாறியது. அதுவும் வளர்ச்சியடைந்து நில மும், வீடும், பொன்னும், பணமுமாக புதுவடிவம் பெற்றது. அரச உத்தியோகங்களும் பல பிரிவு களாக பிரிக்கப்பட்டன. இதிலும் வைத்தியர், பொறியியலாளர், கண க்காளர் என்று தரம் பரிக்கப் பட்டனர். பிரிக்கப்பட்ட தரங்களிலும் மேலே குறிப்பிட்ட மூவரும் முதலிடம் பெற்றுக் கொண்டனர். இதே காலப்பகுதியில் பெண்களும் கல்வி கற்கத் தொடங்கினர் இரு ப்பினும் ஆண்களின் ஆதிக்கத்தை பெண்களால் கட்டுப்படுத்த முடியவில்லை. ஆண்களும் நாளுக்குநாள் தமது சீதனத்தொகையை அதிகரித்த வண்ணமே இருந்தனர் இதே வளர்ச்சி இலங்கை விடுதலை பெற்றபின் துரிதமாக இருந்தது. நிலத்தின் அளவும், வீட்டின் அளவும் பொன்னின் அளவும் பணத்தின் தொகையும் கூடிக்கூடி ஒரு கட்டத்தில் லட்சக்கணக்கான தொகையைத் தாண்டியது.

நாட்டில் கல்வி கற்றோரின் தொகை அதிகரித்த காரணத்தால் அனைவரும் வேலை வாய்ப்பைப் பெற முடியவில்லை எனவே ஒருவர் இருவராக வெளிநாடுகளுக்கு குறிப்பாக மத்திய கிழக்கு நாடுகளுக்கு வேலை தேடிச் சென்றனர். இதன்பின் திருமணம் என்ற உடனே வெளிநாடுகளில் வேலை செய்வோரையே பெண்களும், அவர்களின் பெற்றோர்களும் விரும்பினர். இவர்களின் வருமானமும் நாட்டிலேயுள்ள வருமானத்துடன் ஒப்பிடும்போது அரச உத்தியோகத்தவரைவிட சற்று அதிகமாகவே காணப்பட்டது. இந் தக்காலப்பகுதியில் ஆண்களின் வருமானத்தின் அடிப்படையில் சீதனத்தொகை மீண்டும், மீண்டும் கூடியது.

மத்திய கிழக்கு நாடுகளுக்கு சென்றவர்களின் தொகை அதிகரித்த காரணத்தாலும், வேலை வாய்ப்பைப் பெற முடியாத காரணத்தாலும் இலங்கைத் தமிழர்கள் படிப்படியாக ஐரோப்பாக் கண்டத்திற்குள் நுழையத் தொடங்கினர். இவர்களின் வருமானத் தொகை மத்திய கிழக்கு நாடுகளில் வேலை செய்பவர்களின் தொகையைவிட அதிகரித்ததினால் நாட்டில் பெண்கள் மத்தியில் ஐரோப்பிய நாடுகளில் வேலை செய்பவர்களையே கூடுதலாக விரும்பினர். இந்த விருப்பும் சீதனத் தொகையின் அதிகரிப்புக்கு ஓர் ஏணிப்படியாக அமைந்தது. இந்தக் காலப்பகுதியில் அரச உத்தியோகத்தர்களான வைத்தியா, பொறியியலாளர், கணக்காளர்களின் அந்தஸ்து சமுதாய மத்தியில் குறைந்துவிடவில்லை இவர்களும் இந்த சீதன அதிகரிப்பு வாய்ப்பைப் பயன்படுத்தி தமது தொகையைக் கூட்டினர். இப்படியாக மாறி மாறி நடந்து கொண்டிருந்த சீதன அதிகரிப்பை வெறும் மாப்பிளை மட்டும் பயன்பெறக் கூடாது என எண்ணி மாப்பிளையின் பெற்றோர் ஒரு தொகையை தமக்குக் கேட்கத்தொடங்கினர். இதைத் தான் 'டொனேசன்' என்று அழைக்கின்றனர் எம்மவர்கள். இதன்பின் 'திருமணம்' எமது சமுதாயத்தைப் பொறுத்தவரை வாழ்வுக்காக மட்டுமல்ல வியாபாரத்துக்காகவும் என்று மாற்றிற்று.

இந்தக்காலப்பகுதியில் நாட்டுப் பிரச்சனையும் வளர்ச்சி அடைந்த காரணத்தால் தமிழ் மக்கள் பலர் தமது தாய் நாட்டைவிட்டு வெளியேறி அந்நிய நாடுகளுக்கு அகதிகளாக வந்து சேர்ந்தனர். நாட்டுப்பிரச்சனை ஆரம்பித்த காலங்களிலும், அதன்பின்னரும் சமுதாயத்தில் உள்ள பல பின்னடைவான முறைகள் அழிக்கப்பட்டு விடுமென பலர் கனவு கண்டனர். ஆனால் இவை அழிந்து போவதற்குப் பதிலாக வளர்ந்து கொண்டே போகிறது. இப்போ சீதனம் என்று பேச ஆரம்பித்தவுடன் ரூபாயில் பேசவோ, அன்றி இலங்கையில் உள்ள வீடு, சொத்துக்களைப் பேசவோ யாருக்கும் விருப்பம் வருவதில்லை.

துரிதமான போக்குவரத்து வசதிகளும், தொலைபேசி வசதிகளையும் பயன்படுத்தி ரூபாயில் இருந்த தொகை மாறி, பவுண், டொலர் என்று ஐரோப்பி அமெரிக்க நாணயங்களில் தொகையைக் கேட்கின்றனர். அத்துடன் பொருள், வீடு எதுவாக இருந்தாலும் அவை வெளிநாட்டிலேயே இருக்க வேண்டும் என்பதும் கட்டாயமாகிவிட்டது. இந்த நாடுகளையும் விட்டு வெளியேறி வேறு இடங்களுக்கு செல்ல வேண்டிய நிலை ஏற்படுமாயின் எம்மவர்கள் இதற்குமேல் எதை எதைக் கேட்கப் போகிறார்களோ தெரியவில்லை?

நாம் நாட்டைவிட்டு வெளியேறி அந்நிய நாடுகளுக்கு அகதிகளாக வந்துவிட்டோம். எமக்கும் நாட்டிலேயே நடந்துகொண்டிருக்கின்ற போராட்டங்களுக்கும் எதுவித தொடர்புமில்லை என்று எவரும் எண்ணிவிடக்கூடாது. நாம் நமது தாய் நாட்டைவிட்டு வெளியேறிவிட்டால் எமது சொந்த சமுதாயத்தில் இருந்து தப்பிவிட்டவர்கள் என்று பொருள் இல்லை. எமக்கும் சமுதாயத்தைப்பற்றி எதுவித பொறுப்பும் இல்லை என்று எவருமே எண்ணக்கூடாது. நான் ஒருவன் திருந்தி விடுவதால் சமுதாயம் முழுவதுமே திருந்திவிடுமா என்று எண்ணாதீர். ஒருவர் இருவராக சேர்ந்தே சமுதாயம், எமக்கும் பொறுப்புக்கள் இருக்கின்றன. நிறையவே இருக்கின்றன. அவைகளை நிறைவேற்ற நாம் மீண்டும் நாட்டுக்குத் திரும்பி துப்பாக்கிகளை கையிலேயே எடுத்தால் மட்டுமே இவற்றை சாதித்துவிடலாம் என்று தப்பாக எண்ணிவிடக் கூடாது. வாழுகின்ற நாடுகளிலே இருந்து கொண்டு வாழக்கூடிய வழிமுறைகளை உங்கள் சொந்த வாழ்க்கையிலும்சரி, அன்றி உறவினர்கள், நண்பர்கள் வாழ்விலும்சரி காலம் காலமாக கடைப்பிடித்துவந்த சமுதாய வழிமுறைகள் மாற்றப்பட்டு புதிய சிந்தனை கொண்ட சமுதாயத்தை அமைப்பதற்கு வேண்டிய வழிகளையும், வரையறைகளையும் வகுத்துக் கொள்ளுங்கள். அதுவே நீங்கள் உங்கள் தமிழ் சமுதாயத்திற்கு குறிப்பாக தமிழ்ப் பெண் சமுதாயத்திற்கு செய்யும் பெரும் பணியாகக் கருதப்படும்.

மிகுதி அடுத்த இதழில்

www.tamilarangam.net



# விம்பிள்டன் அணி சாம்பியன்

ஈழபூமியின் வெற்றிக் கிண் ணத்திற்காக 17-7-93ல் கிங் ஜோஜர்ஸ் மைதானத்தில் நடை பெற்ற 12 ஓவர் கிரிக்கெட் சுற்றுப்போட்டியில் குட் மேய்ஸ் அணியினை தோற்கடித்து விம்பி ள்டன் சாம்பியன் ஆனது.

10 விளையாட்டுக்கழகங்கள் பங்கு பற்றிய இப்போட்டி இரு பிரிவுகளாக நடாத்தப்பட்டன. ஒரு பிரிவில் குட் மேய்ஸ் அணியினர், விஹ்ஸ் மார்ஷ் வி.க., லூசஸயம்.ரவு. வி.க., கிரீன் போர்ட் வி.க. ஆகியவற்றுடன் மோதி இறுதி போட்டிக்கு தெரிவு ஆகினர்.

மற்றைய பிரிவில் விம்பிள்டன் அணியினர், ஈஸ்ட் லண்டன் யுனைட்டட் த.வி.க., செரண்டிப் வி.க., சிறிலங்கன் வி.க. ஆகிய வற்றுடன் வெற்றிபெற்று இறுதிப் போட்டிக்கு தெரிவு செய்யப்ப ட்டனர்.

இறுதிப் போட்டியில் விம் பிள்டன் எதிர் குட் மேய்ஸ் போட்டியில் முதலில் துடுப்பெடு த்தாடிய குட் மேய்ஸ் அணியினர் 12 ஓவரில் 7 விக்கட் இழப்பிற்கு 79 ஓட்டங்கள் பெற்றனர். இவற்றில் ராஜன் 16, ரகுணன் 15 ஓட்டங்களைப் பெற்றனர். தொட ர்ந்து 80 ஓட்டங்களைப் பெற வேண்டிய நிலையில் விம்பிள்டன் அணி ஆரம்பத்தில் சிறப்பாக ஆடியது. எனினும் இறுதி நேர த்தில் எந்த அணி வெல்லுமோ என்ற நிலையில் கடைசி பந் துவீச்சில் ஒரு ஓட்டத்தினை எடுத்து விம்பிள்டன் அணியானது ஈழபூமியின் வெற்றிக் கிண்ணத் தினை சுவீகரித்துக்கொண்டது. 12 ஓவர்களில் விம்பிள்டன் ஐந்து விக்கட் இழப்பிற்கு 79 ஓட்ட ங்களை எடுத்தனர். இவற்றில் ஆனந் 21, பிரசன்னா 38, ஹமி 19 ஓட்டங்களை எடுத்தார்கள்.

வெற்றி பெற்ற விளையாட்டுக் கழகத்திற்கான பரிசில்களை 'உதயகாலை' யாழ் இந்துக் கல்லூரி பழைய மாணவ சங்க செயலாளருமான திரு.ஸ்கந்த மூர்த்தி அவர்கள் வழங்கினார். சிறந்த் பந்து வீச்சாளராக விம் பிள்டன் உதயனும், சிறந்த துடுப் பாட்ட வீரராக ஹமியும், சிறந்த சுற்றுப்போட்டி நாயகனாக ஆனந் அவர்களும் தெரிவு செய்ய ப்பட்டார்கள். கடந்த ஆண்டு நடைபெற்ற ஈழபூமியின் வெற்றிக் கிண்ணத்திற்கான போட்டியில் சம்பியனாக கிரீன் போர்ட் அணியும், 'ரன்னரப்' ஆக செரண்டிப் அணியும் வந்தது குறிப்பிடத்தக்கது.

# செரண்டிப் அணியிடம் ஈஸ்ட்ஹாம் அணியினர் படுதோல்வி

15-8-93 இல் தோமஸ் வோல் மைதானத்தில் நடைபெற்ற போட் டியில் தென் மேற்கு லண்டனில் நடுநாயகமாக விளங்கும் செர ண்டிப் அணியிடம் ஈஸ்ட்ஹாம் அணி படுதோல்வியுற்றது. முத லில் துடுப்பெடுத்தாடிய செரண்டிப் 93 ஓட்டங்களைப்பெற்று சகல விக்கட்டுகளையும் இழந்தார்கள். இவற்றில் ஒஸ்மான் 20 ஓட் டங்கள் எடுத்தார். பந்து வீச்சில் சுரேன் 8-23-4, ரவி 8-37-2, சுதன் 6-8-2, முரளி 5-7-1. தொடர்ந்து துடுப்பெடுத்தாடிய ஈஸ்ட்ஹாம் அணி 37 ஓட்ட ங்களை எடுத்து சகல விக்கட்டு களையும் இழந்தார்கள். சிறி 10 ஓட்டங்களை எடுத்தது குறிப்பிட த்தக்கது. பந்து வீச்சில் செரண் டிப்பின் வேகப் பந்துவீச்சாளர் ரஞ்சித் 5 விக்கட்டுகளைக் கை ப்பற்றி செரண்டிப் அணியின் வெற் றிக்கு அணிவகுத்தார்.

ஈஸ்ட்ஹாம் அணிக்கு கிடை க்கப்பெற்ற ஆகக்குறைந்த ஓட்ட எண்ணிக்கை இதுவே என அறிய ப்படுகிறது.

# யாழ் பாடசாலைகள் விளையாட்டுச்சங்கம் நடாத்தும் மாபெரும் கிரிக்கெட் – கூடைப்பந்தாட்ட சுற்றுப்போட்டி

ஆகஸ்ட் 30ம் திகதி யாழ் பாடசாலைகள் விளையாட்டுக் கழகத்தினால் இரண்டாவது தட வையாக பாடசாலைகளுக்கிடை யிலான கிரிக்கெட் போட்டியும் முதன்முதலாக பெண்களுக்கிடை யிலான கூடைப்பந்து சுற்றுப்போட் டியினையும் நடாத்தவுள்ளனர்.

கடந்த ஆண்டு நடைபெற்ற கிரிக்கெட் சுற்றுப்போட்டியில் யாழ் மத்திய கல்லூரி சம்பியன் ஆகவும் 'ரண்னரப்' ஆக சென்.பற்றிக்ஸ் கல்லூரியும் தெரிவாகியது.

கிரிக்கெட் போட்டியில் பங்கு பற்றும் கல்லூரிகள்: சிதம்பரா கல்லூரி, ஸ்ரான்லி கல்லூரி, யாழ் இந்துக்கல்லூரி, மகாஜனாக் கல் லூரி, சென்.ஹென்றிஸ் கல்லூரி, சென்பற்றிக்ஸ் கல்லூரி, ஸ்கந்த வரோதய கல்லூரி, காட்லி கல்லூரி, யாழ் மத்திய கல்லூரி, கொக்குவில் இந்து கல்லூரி, மானிப்பாய் இந்து கல்லூரி, சென்.ஜோன்ஸ் கல்லூரி, யூனியன் கல்லூரி.

கூடைப் பந்தாட்ட போட்டியில் பங்குபற்றும் கல்லூரிகள்: சுண்டு க்குழி பெண்கள் கல்லூரி, யாழ். இந்து பெண்கள் பாடசாலை, இளவாலை புனித கன்னியர் மடம், யாழ் புனித கன்னியர் மடம், மகாஜனாக் கல்லூரி, யூனியன் கல்லூரி, வேம்படி பெண்கள் உயர்நிலைப் பாடசாலை.

**விளையாட்டுச் செய்தித் தொகுப்பு**
**சஞ்சீவ்ராஜ்**

# ரூட்டிங் புளூஸ் விளையாட்டுக் கழகத்தின் மெய் வல்லுனர் போட்டி

28-8-93 சனிக்கிழமை ரூட்டிங் புளூஸ் விளையாட்டுக் கழக மானது தமது அங்கத்தவர் களுக்கிடையே வருடாந்தம் நடாத்தும் மெய்வல்லுனர் போட்டிகள் இவ்வாண்டும் 'ரூட்டிங் பெக் அத்லெட்டிக் ரக்' இல் நடைபெறவுள்ளது. இக்கழக மானது சிறுவர் சிறுமியர்களுக்கான ஓட்டப்போட்டிகள், நீளம் பாய்தல், உயரம் பாய்தல் மற்றைய வயது வந்தவர்கள் எனக் கருதப் படுவோருக்கு 100 மீற்றர் முதல் 1500 வரையிலான ஓட்டப் போட்டிகள், நீளம் பாய்தல், உயரம் பாய்தல், குண்டெறிதல், ஈட்டி எறிதல், அஞ்சல் ஓட்டப் போட்டிகள், கயிறிழுத்தல் போட்டிகள் என்பன நடை பெறவுள்ளன.




# தமிழ் யூனியன் அணி வெற்றி

22-8-93இல் நடைபெற்ற செரண்டிப் எதிர் தமிழ் யூனியன் 'லீக்' போட்டியில் செரண்டிப் அணி தோல்வியுற்றது. முதலில் துடுப்பெடுத்தாடிய தமிழ் யூனியன் 35 ஓவர்களில் 129 ஓட்டங்களை எடுத்தார்கள். இவற்றில் ராஜ சேகர் 33, கங்கேஸ் 21, இளங்கோ 23, விஜநாதன் 10, ரவி 10 ஆட்டங்களைப்பெற்றார்கள். 35 ஓவர்களில் 130 ஓட்டங்களை பெறவேண்டிய நிலையில் துடுப் பெடுத்தாடிய செரண்டிப் அணி 48 ஓட்டங்களுக்கு சகல விக்கட்டு களையும் இழந்தார்கள். தயா 14 ஓட்டத்தினைப் பெற்றுக்கொண் டார்.

# தமிழ் யூனியன் 'ஏ' அணியின் சாதனை – ராஜன் 204 ஓட்டங்கள்

தமிழ் யூனியன் அணிக்கும் கிளிபோர்ட் அணிக்கும் இடையில் நடைபெற்ற விறுவிறுப்பான போட் டியில், காலநிலை காரணமாக போட்டி இடையில் நிறுத் தப்பட்டது. இரு தரப்பிலும் முதலில் துடுப்பெடுத்தாடிய தமிழ் யூனியன் அணி 6 விக்கட் இழப்பிற்கு 300 ஓட்டங்களை 35 ஓவர்களில் எடுத்தனர். தமிழ் யூனியன் அணியைச் சேர்ந்த வீரர் ராஜன் அபாரமாக ஆடி 204 ஓட்டங்களைக் குவித்தார். மைதா னத்தின் நாலாபக்கமும் பவுண்டரி களையும் சிக்ஸ்களையும் அடித் தார். இதுவரை நடந்த லீக் போட்டியில் ஆகக்கூடுதலான ஓட்ட எண்ணிக்கை பெற்ற அணி தமிழ் யூனியன் அணியேயாகும்.

பதிலுக்கு துடுப்பெடுத்தாடிய கிளிபோர்ட் அணி 84 ஓட்டங் களுக்கு 2 விக்கட் இழந்த நிலை யில் போட்டி நிறுத்தப்பட்டது.

# மயிர்கூச்செறியும் நிலையில் கிரிக்கெட் போட்டி – விம்பிள்டன் மோதல்

கிளிபோர்ட் அணிக்கும் விம்பி ள்டன் அணிக்கும் நடைபெற்ற போட்டியில் விம்பிள்டன் அணி 2 ஓட்டங்களால் வெற்றியீட்டியது. முதலில் துடுப்பெடுத்தாடிய விம் பிள்டன் அணி சகல விக் கட்டுகளையும் இழந்து 157 ஓட்டங்களைப் பெற்றார்கள். விம் பிள்டனில் ரி 24, பகீரதன் 36, ரகு 10 ஆட்டம் இழக்காமல் உதயன் 10 ஓட்டங்களையும் பெற்றனர். பந்து வீச்சில் அணித்தலைவர் சுகந்தன் மிகவும் சிறப்பாக பந்து வீசி 19-3 விக்கட்டுகளையும், சுசில 14-1, ஜனா 16-1, பிரியன் 26-2 ஆகியோர் விக்கட்டு களைக் கைப்பற்றினர். தொடர்ந்து துடுப்பெடுத்தாடிய கிளிபோர்ட் அணி 155 ஓட்டங்களைப்பெற்று சகல விக்கட்டுகளையும் இழ ந்தார்கள் இவற்றில் நொவ்வெல் 24, ஜனா 22, மணி 21, சுகந்தன் 17, விம்பிள்டன் அணியின் வேக ப்பந்து வீச்சாளர் உதயன் இறுதி நேரத்தில் மிகவும் சிறப்பாக பந்து வீசி அணியின் வெற்றிக்கு உறுது ணையானார்.

# நியூமோல்டன் அணி வெற்றியீட்டியது

செரண்டிப் எதிர் நியூமோல்டன் அணிக்கு எதிரான 'லீக்' போட் டியில் மோல்டன் அணி வெற் றியீட்டியது. முதலில் துடுப் பெடுத்தாடிய நியூமோல்டன் அணி 187 ஓட்டங்களைப்பெற்று சகல விக்கட்டுக்களையும் இழந்தது. ஜீவி 77 ஓட்டங்களையும், இதில் 10 பவுண்டரிகளை எடுத்து பார் வையாளர்களைக் கவர்ந்தார்.

பந்துவீச்சில் வினோ 43-4, ரஞ்சித் 32-2, தபோ 23-2, ராஜ் 15-1, ஒஸ்மான் 54-1. 188 ஓட்ட ங்களைப்பெறவேண்டிய செரண் டிப்பானது 52 ஓட்டங்களை மட்டுமே பெற முடிந்தது. பந்து வீச்சில் அன்பன் 28-4, டினோ 12-3, தபேந்திரன் 4-2, சிறீராம் 3-1 ஆகியோர் விக்கட்டுகளையும் கைப்பற்றினர்.

www.tamilarangam.net



# 'அகதி'க்கு வந்த அவதி என்ன?

வொண்ஸ்வேத் தமிழர் நலன்புரிச் சங்கத்தின் ஆதரவில் ரூட்டிங் பகுதியில் ஒரு கூட்டம் ஒழுங்கு செய்து நடாத்தப்பட்டது. சுவிற்சர்லாந்து நாட்டில் இருந்து அகதிகளைத் திருப்பி அனுப்ப ஒரு திட்டம் தயாராகின்றது. அந்தத் திட்டத்தை எதிர்த்து நாம் செயற்பட வேண்டும் என்பதே அந்தக்கூட்டத்தின் நோக்கம்.

லண்டன் வாழ் அகதித் தமிழ் மக்களை உலுப்பிய செய்தி இதுதான். இந்த சங்கத்தினால் ஒழுங்கு செய்யப்பட்ட கூட்டத்திற்கான காரணங்களை ஒரு துண்டுப்பிரசுரம்மூலம் வெளியிட்டிருந்தார்கள். சுவிஸ் தமிழ் அகதிகளை திருப்பி அனுப்பப் போகின்றது. அப்படி அனுப்பினால் தொடர்ந்து லண்டனும் அனுப்பும். அகதிக் குஞ்சுகள் ஆத்திரப்பட்டார்கள். அவதிப்பட்டார்கள். ஓடோடி கூட்டத்திற்கு வந்தார்கள். கும்பாபிசேகத்திற்கும், சாயிபாபா பஜனைக்கும் மட்டும் தரள்திரளாய்க் குவியும் எங்கள் தாயக்குலம் நாட்டைவிட்டு அனுப்பப்போகிறார்கள் என்று கண்டதுமே பறந்தடித்துக்கொண்டு வந்தார்கள்.

அகதிகளுக்கான நிறுவனத்தில் வேலை செய்யும் மல்கம் என்பவரும் இந்தக் கூட்டத்திற்கு வந்திருந்தார். றாக் நிறுவனத்தில் வேலை செய்யும் வரதகுமாரும் இந்தக்கூட்டத்திற்கு வந்தார். கூட்டம் தொடங்கியது. ஆர்ப்பாட்டந்தான். கூட்டம் முடிவில் அப்பாடா லண்டன் திருப்பி அனுப்பாதாம். கூட்டம் நடத்தினவங்களுக்கு மூஞ்சை உடையக் கொடுக்க வேணும். எடுத்தவற்றிற்கெல்லாம் அடித்த பரம்பரைதானே நாம். கூட்டம் கலைந்தது. லண்டனின் நிரந்தரமற்ற அகதிவாசிகளுக்கு உச்சியில் ஆனந்தம். இது நடந்து சில நாட்களின்பின் லண்டனில் இருந்து ஒரு பத்திரிகை ஒரு செய்தியைத் தாங்கி வந்தது. ஆதாரமற்ற செய்திகளைப்பரப்பும் எந்த வதந்திகளையும் நம்பவேண்டாம். அகதிகள் தொடர்பாக 'அகதி' பத்திரிக்கைக்குத் தெரியாமல் எதுவும் நடக்காதாம். நல்ல விடயம். தமிழ் மக்களுக்காக வெளிவரும் ஒரு பத்திரிகைக்கு தெரியாமல் இங்கிலாந்து உள்நாட்டு அமைச்சு முடிவெடுக்காது என்பது சந்தோசமான விடயம்தானே. செய்தி மேலும் சொன்னது. இதுபோன்ற வதந்திகளை நம்பாதீர்கள் அகதி தொடர்பான எந்த விடயத்திற்கும் 'அகதி' ஐ நாடுங்கள் என்று.

வொண்ஸ்வேத் நலன்புரி அமைப்பு அகதிகளைக்கொண்ட ஒரு அமைப்பு. அகதிகளுக்கு எதிராக அது செயற்பட வேண்டியதன் அவசியம் என்ன? 1986ஆம் ஆண்டு ஆரம்பிக்கப்பட்ட இந்த அமைப்பு அகதிகள் தொடர்பான விடயங்களில் நீண்ட காலமாக ஈடுபட்டு வந்தது.

சரி இந்த அமைப்பு கூட்டிய கூட்டமே பிழை என்று வைப்போம். என்ன வைப்பது, பிழைதான். 'அகதி' பத்திரிகை மட்டுமே சரி. எல்லாம் தெரிந்த மந்திரிகள். ஏன் இப்போது கும்மாளம் இடுகிறீர்கள். கடந்த இதழில் ஒரு செய்தி. சுவிஸ் அகதிகளை திருப்பி அனுப்புமாம். அனுப்பினால் லண்டனும் அனுப்புமாம். இதைத்தானே மாதங்கள் முன்பாக வொண்ஸ்வேத் அமைப்புச் சொன்னது. மாட்டுக்கு மாடு சொன்னால் கேட்காதோ?

உள்நாட்டு அலுவல்கள் அமைச்சர் சில வேளை 'அகதி'க்கு சொல்லியிருப்பாரோ. வொண்வேத் சங்கக் கூட்டம் வைத்தபோது இருந்த உள்நாட்டு மந்திரி வேறு ஒருவர்தானே மந்திரி மாற்றம் சில வேளை வியாழபகவானை தமிழர்களுக்கு எதிராக மாற்றியிருக்குமோ?

ஐயா 'அகதி'வான்களே! பிரச்சனையை சரியான தளத்தில் இருந்து பாருங்கள். கொடுக்கின்ற செய்தி எப்படி அகதிகள் மத்தியில் பாதக விளைவைக் கொண்டு வரும் என்பதைச் சிந்தியுங்கள். 'அகதி' பத்திரிகை வரவின் அவசியத்தை நாம் வலியுறுத்துகிறோம். ஆனால் அவதிப்படாதீர்கள். நிதானமாக எழுதுங்கள். நிறைய எழுதுங்கள்.

## ஐநாவின் தலையீட்டை நாம் முற்றாக நிராகரிக்கிறோம்

**வெளிநாட்டலுவல்கள் அமைச்சு**


(கொழும்பு 20-8-93)

இலங்கையில் இருக்கும் பிரச்சனைக்கு ஒரு நிரந்தரத் தீர்வைக் காணும் பொருட்டு ஐக்கிய நாடுகள் சபையின் தலையீட்டைக் கோரும் தீர்மானத்தை ஸ்ரீலங்கா அரசு முற்றாக நிராகரித்துள்ளது. மேற்படி நிராகரிப்பை வெளிநாட்டலுவல்கள் அமைச்சின் பேச்சாளர் மேற்படி தேதியில் வெளியிட்டார்.

தலையிடும் தீர்மானம் 20-8 வெள்ளிக்கிழமை மாலை ஜெனீவாவில் வாக்கெடுப்புக்கு வர இருப்பதாக செய்திகள் கிடைத்தன. இத்தீர்மானத்தை ஸ்ரீலங்கப் பிரதிநிதிகள் வன்மையாக எதிர்த்தனர். ஐநாவின் உறுப்பு நாடுகளின் பிரதிநிதிகள் எமது பக்கமே வாக்களிப்பார்கள் என்ற நம்பிக்கை எமக்குண்டு என்று பேச்சாளர் மேலும் தெரிவித்தார்.

மேற்படி தீர்மானம் அமெரிக்கா, பிரான்ஸ், பெல்ஜியம், நோர்வே ஆகிய நாட்டு பிரதிநிதிகளால் முன் வைக்கப்பட்டது குறிப்பிடத்தக்கது.

# நாழிகை பற்றியோர் கண்ணோட்டம்!




புதியதொரு சஞ்சிகை வெளி வருகின்றது என்று சொன்னார்கள். லண்டனில் இருந்து வெளிவருகிறது என்று கூடச் சொன்னார்கள். இங்கிருந்து பத்திரிகைகள் வருகின்றன. அந்தளவுக்கு சஞ்சிகைகள் வருவதில்லைத்தானே! நல்லதொரு முயற்சி! எனக்குள்ளே எண்ணிக்கொண்டேன்.

யார் இதை வெளியிடுகிறார்கள்? இவர்களின் பின்னணி என்ன? புலிக்கு சப்போட்டோ? இல்லையோ? வழமையான கேள்விகளை நானும் அவர்களிடம் கேட்டேன். மாலி என்றார்கள். 'தமிழனின்' குணத்தால் தாக்குப்பட்டதும், 'தமிழோசை' இரைச்சலில் அள்ளுப்பட்டதும், புதிய முகாமுக்குள் முடங்கியதும் நிறையச் சொன்னார்கள்.

நாழிகை நல்ல பெயர். அர்த்தம் கொஞ்சம் புரியவில்லை, நாளாய் இருக்கலாம், தினமாய் இருக்கலாம் அது போல இதுவும் இருக்கலாம். நானே விளக்கத்தைத் தேடிக்கொண்டேன். அவசர அவசரமாய்ப் போய் ஒரு நாளிகையை வாங்கினேன். அட்டை அமர்க்களம். பலவர்ணத்தில் அச்சாகியிருந்தது. 'இந்தியா டுடே'ஐ ஞாபகப்படுத்த முயற்சித்தது. புரட்டினேன். நல்லது. புதுமுயற்சி ஆதரவு கொடுங்கள் என்று கேட்டிருந்தார் ஆசிரியர். தொடர்ந்தேன். இதுவரை மாலி இலங்கையரா இந்தியரா என்பது எனக்கு விளக்கமில்லாமல் இருந்தது. நாழிகை அதனை தெளிவு செய்தது. நன்றி. மாலி இந்தியரேதான். லண்டனில் ஒரு சஞ்சிகையைத் தொடங்கி இலங்கைச் செய்திகளையும் இடையே சேர்த்திருந்தார். போற்றப்பட வேண்டிய விடயம்.

ஒரு செவ்வி. நான் செல்வி என்று வாசித்து விட்டேன். மன்னிக்க வேண்டும். நல்ல கேள்விகள். நாங்கள் இதுவரை 'கேள்வி'ப்படாத ஆட்களைப் பற்றி இருந்தன. அதனால் நல்ல கேள்விகள். அருமையான விடைகள். பதில்களும் எமக்கு புரியவில்லை. மாலிக்கு ஒரு சின்னப் பிரச்சனை. எப்ப பார்த்தாலும் ஏதாவது வித்துவான் ஒரு வரைப்பிடித்து உருட்டுவது தான் அது. நன்றி. பாவம் வாசகர். இம்மை மறுமை இல்லாமல்....... 'ஐயோ ஐயோ இதுதானே லண்டன்....' லூசியம் நண்பர்களின் பாட்டை சிலநிமிடம் போட்டுக் கேட்டேன். இனிமையாய் இருந்தது.

பாட்டு முடியவும் நாழிகையைத் தூக்கி புரட்டு புரட்டு என்று புரட்டினேன். ஒரு பக்கத்தில் ஜெயலலிதா. கடைசியாய் நரைத்த மயிர் எங்கே என்று தேடுவது போல அமைந்தது கட்டுரை. பிரமாதம்! அடுத்த பக்கத்தில் கருணாநிதி, கறுப்புக் கண்ணாடியில் முகமூடிக்கள்ளன் போல். அவருக்கு கறுப்பு மயிர் எங்கெல்லாம் உண்டு என்று அலசியது கட்டுரை. பிறகு நரசிம்மராவ். அப்படிப்பல. அவர் இலங்கையையும் இடைக்கிடை எட்டிப்பார்த்திருக்கிறார். நல்லது படியுங்கள். இந்தியாவின் விபரங்கள் அடங்கிய ஒரு டயரி. அன்பர் மாலியே! புத்தகம் விடவிரும்பினால் புத்தகமாய் விடுங்கோ! தமிழீழம் எரிந்து கொண்டிருக்கிறது. அன்பர் ஜெயலலிதாவுக்கு என்ன பிடிக்கும் என்பதா முக்கியம்?

– பாலன்

www.tamilarangam.net



# கோயில் தாரர்களிடையே உள்ள மோதலே வெடிப்புக்குக் காரணம்

(கொழும்பு)

கொழும்பு கதிரேசன் கோவிலில் குண்டு வெடித்த சம்பவம் யாவரும் அறிந்ததே. இக்குண்டு வெடிப்புக்கு கோயில்தாரர்களிடையே உள்ள குரோதமே காரணம் என்று கூற ப்படுகிறது. 3-8-93 அன்று கிடைத்த செய்திகளின் விபரம் வருமாறு.

பம்பலப்பிட்டியில் உள்ள கதி ரேசன் கோவில் கட்டிடம் குண்டு வெடிப்புக்கு உள்ளானது. இதனால் நான்கு பக்தர்கள் ஸ்தலத்திலே மரணமானார்கள். 25 பேர் காய முற்றனர். வேல் திருவிழா நடை பெற இருக்கும் வேளையிலேயே இவ்வாறு குண்டு வெடிப்பு நிந்தது. மேற்படி விழாவின்போது பொலிஸ் பாதுகாப்பு ஸ்திரப்படுத்தப்பட்டிருந் தது குறிப்பிடத்தக்கது.

ஒரு தமிழ் தகவல் கொடு ப்பவர் எமக்கு தொலைபேசியில் பிரச்சனை நடக்க இருப்பதாகக் கூறினார். பிரச்சனைப்பட்ட ஒரு குழுவினர் குழப்பம் விளைவிக்க விருப்பதாக அவர் கூறினார். இதனாலேயே நாம் பாதுகாப்பை ஸ்தரப்படுத்தினோம்'' இவ்வாறு குறிப்பிட்டார் இராணுவப் பேச்சாளர் ஒருவர்.

தமிழீழ விடுதலைப் புலிகளி னால் மேற்கொள்ளப்பட்ட தாக்கு தலை அடுத்து சிங்கள் கிளர்ச் சியாளர்களினால் மேற்படி குண்டு வெடிப்பு நிகழ்ந்திருக்கலாம் என்று நான் எண்ணவில்லை. இந்துக் குழுக்கள் இரண்டிற்கிடையே நட ந்து முடிந்த கலகமே. குண்டை வீசியவர் ஒரு ஆண். முருகன் விக்கிரகத்திற்கு அருகில் நின்று வணங்கிக் கொண்டிருந்தவர்கள் மீதே குண்டு வீசப்பட்டது. இற ந்தவர்களில் குண்டு வீசிய வரும் ஒருவர் என்று கூறுகிறார் பொலிஸ் பேச்சாளர்.

முதல் குண்டு வெடித்து சில மணிநேரங்களில் மற்றொரு குண்டு வெடித்தது. விநாயகர் கடவுளுக்கு அருகில் இந்தக் குண்டு வெடி த்தது. செப்புப் பானை, அல்லது குடம் ஒன்றின் உள்ளே வைத் திருந்த குண்டே இவ்வாறு வெடி த்தது. இரண்டாவது குண்டு வெடித்தபோது இரு பெண்களும் ஒரு ஆணும் கொல்லப்பட்டனர். ஏழு பேர் காயமடைந்தனர். முருகனின் வேலை தாங்கி செல்ல இருந்த ஊர்திக்கு எந்தச் சேதமும் ஏற்படவில்லை.

# அரசு அக்கறை காட்டவில்லை

## நீங்கள் தொடர்ந்திருப்பதில் பயன் இல்லை! கரிகாலன் கருத்து

(நமது நிருபர்)

யாழ்ப்பாணத்தில் புலிகளிடம் இருப்பில் இருக்கும் 33 கைதி களையும் புலிகள் விடுதலை செய்ய மறுத்துவிட்டனர். மாதக் கணக்காக இந்த விவகாரம் தொடர்ந்து இழுபட்டுக் கொண்டிரு க்கிறது. தங்களை விடுவிக்க அரசு உடனடி நடவடிக்கை எடுக்க வேண்டும், இல்லையென்றால் உண்ணாவிரதம் மேற் கொள்ளு வோம் என்று கைதிகள் உண்ணா விரதத்தை தொடங்கியமை தெரி ந்ததே.

இது பற்றி கடந்த திங் கட்கிழமை 17-8-93 அன்று கிடைத்த செய்திகளின்படி கைதி ப்பரிமாற்றம் தோல்வியில் முடிவ டைந்துள்ளது. வடக்குப் பகுதி யின்மீது அரசு அமுலில்வைத் திருக்கும் பொருளாதாரத் தடை யை நீக்க வேண்டும், அங்கு அத்தியாவசியப் பொருட்கள் அனு ப்பப்படவேண்டும் என்ற கோரி க்கையே விடுதலைப்புலிகள் கை திகளை விடுவிக்க முன்வைத் தனர்.

நாம் கைதிப்பரிமாற்றம் பற்றி பேசவில்லை அரசுதான் வலிந்து கைதிப்பரிமாற்றம் பற்றி கேட்கிறது. பொருளாதாரத் தடையை நீக் கினால் நாம் கைதிகளை விடு விக்கத் தயார் என்றுதான் குறிப் பிட்டிருந்தோம். இனியும் அரசு நமது கோரிக்கைக்கு தலை சாய்க்கும் என்று நாம் எண் ணவில்லை. எனவே நீங்கள் இங்கு தங்கியிருப்பது வீண், திரும்பி சொந்த இடங்களுக்குப் போகும் ஆயத்தங்களைச் செய்யுங்கள் என்று புலிகளின் அமைப்பைச் சேர்ந்த கரிகாலன் விடுதியில் தங் கியிருந்த கைதிகளின் உறவினர் களிடம் தெரிவித்தார்.

அரசும் புலிகளும் இணைந்து எங்களை ஏமாற்றிவிட்டார்கள். எங் கள் பிள்ளைகளை விடுவிக்க நாம் முயற்சி செய்வோம் என்று கொழு ம்பு திரும்பிய பெற்றோர் தெரிவித் துள்ளார்கள்.

# வீட்டுப்பணிப்பெண் உண்மையை ஒப்புக்கொண்டார். பாலியல் வன்முறைக்கு உட்படுத்தப்பட்டேன் என்பது பொய்யே!

(நமது நிருபர்)

நால்வர் தன்னை பலாத்காரம் பண்ணி பாலியல் உறவுக்கு ட்படுத்தியதாக கூறிய இலங்கைப் பெண்மணி ஒருவர் சைப்ரஸ் கோர்ட் இல் 18-8-93 அன்று ஆஜரானார். நிக்கோசியா என்னும் மாவட்ட நீதிமன்றத்திலேயே மேற் படி அவர் ஆஜரானார். 25 வயது நிரம்பிய ஜயவர்த்தனா கோமராஜ் சாந்தினி நில்மினி கடந்த வெள்ளிக்கிழமை பொலிசிடம் தான் கூறியது அத்தனையும் பொய் என்று ஒப்புக் கொண்டார். அரசிடம் இருந்து நிறையப் பணம் பெற்றுக் கொள்ளவே இவ்வாறு கதையை உருவாக்கினேன் என்றார். நில்மினி மீண்டும் 20-8-93 வெள்ளிக் கிழமை மீண்டும் நீதிமன்றத்தில் ஆஜராவார்.

நில்மினி திருமணமானவர் இவ ருக்கு ஒரு பிள்ளையும் உண்டு இருவருமே இலங்கையில் உள் ளனர். பணம் அனுப்பும்படி அவரது கணவர் கடிதம் எழுதியிருந்தாராம். கணவன் அங்கு ஒரு வீடு கட் டிக்கொண்டிருக்கிறார். அதனைக் கட்டிமுடிக்கவே பணம் வேண்டும் என்று கேட்டிருந்தார். இம்மாதம் 5ம் திகதி நில்மினி ஒரு அறை யினுள் நிர்வாணமாகக் காண ப்பட்டார். கைகள் கட்டப்பட்டி ருந்தன.

நான் பாலியலுறவுக்கு உட்படு த்தப்பட்டேன். 30 வயது நிரம்பிய இருவர் என்னைப்பலாத்காரம் செய்தார்கள். 35 வயது நிரம்பிய ஒரு பெண் என்னைப் புகைப்படம் எடுத்தார். 50 வயது நிரம்பிய ஒருவர் என்னை வீடியோ பிடி த்தார். வைத்தியசாலையில் அனு மதிக்கப்பட்ட இவரின் உடலில் காயங்கள் காணப்பட்டன. ஆனால் இவையாவும் தன்னாலேயே செய் யப்பட்டன என்று இவர் கூறு கின்றார். சிங்கள மொழியில் நில் மினி ஜனாதிபதி கிளாவ்சொஸ் கிளறிடஸ் இற்கு ஒரு கடிதம் எழுதியிருந்தார் 50,000 பவுண்ஸ் பணம் நஷ்டஈடு தரவேண்டு மென்று பொலிஸ் வாக்குமூலத்தில் இவர் தன்னைத் தெரிவித்தார். பொய் கூறியதற்காக இவருக்கு 750 சைப்பிரஸ் பவுண்கள் அல்லது ஒரு வருடம் சிறைத் தண்டனை கிடைக்கலாம் என்று தெரிவிக் கப்படுகிறது.

# பெண் புலிகளின் முகாமில் குண்டு வெடிப்பு

## பாரிய சேதம் ஏற்பட்டுள்ளதாக செய்தி

(நமது நிருபர்)

யாழ் நகரில் உள்ள பெண் புலிகளின் முகாம் ஒன்றினுள் குண்டு ஒன்று வெடித்துள்ளதாக அங்கிருந்து வவுனியாவுக்குக் கிடைக்கும் செய்திகள் தெரிவி க்கின்றன. குண்டு தற்செயலாக வெடித்ததாகவே கருதப்படுகிறது. இந்தக் குண்டு வெடிப்பால் பல பெண் புலிகள் இறந்துள்ளனர் என்று நம்பப்படுகிறது. உண்மை விபரம் இன்னமும் அறியப்பட வில்லை. செய்திகள் 17-8-93 அன்று வெளியாகின.

# இராணுவம் முன்னறிவிப்பின்றி பின்வாங்கியது. பிரதான முகாம் நோக்கி திடீர் நகர்வு

(மன்னார்)

மன்னாரில் உள்ள பல சிறிய இராணுவ முகாம்கள் தமது கட்டுப்பாட்டுப் பகுதிகளில் இருந்து விலகி பெரிய இரு ராணுவமுகாம்களுக்கு பின் வாங் கிக்கொண்டன. எந்தவித முன்ன றிவிப்பும் இன்றி திடீரென முகாம் களை கைவிட்டுவிட்டு பெரும் பாலான கட்டுப்பாட்டுப் பகுதி களில் இருந்து இராணுவம் பெரிய இரு முகாம்களுக்கு இடம் பெயர்ந்து விட்டதாக கொழு ம்புக்குக் கிடைத்த செய்திகள் தெரிவித்தன. இந்த கட்டுப்பாட்டுப் பகுதியில் சுமார் 500 குடும்பங்கள் வரையில் குடியேற்றப்பட்டிருந்தன. இவர்களுக்கு எந்தப்பாதுகாப்பும் இல்லாமல் இராணுவம் நகர்ந் துள்ளது. குடியேறிய மக்கள் என்ன நடக்கப்போகின்றது என்ற அச் சத்தில் இருக்கின்றார்கள்.

அண்மையில் புலிகள் வெற் றிகரமாக நடாத்திய தாக்குதல் களின் காரணத்தினாலேயே இந்த முகாம்கள் மூடப்பட்டன என்று ஊகிக்கப்படுகிறது. இங்கு ஒரு பாரிய நடவடிக்கை ஏற்படுமோ என்று மக்கள் அச்சம் கொண்டுள்ளார்கள்.

# இடைக்கால சபைக்கு நாம் ஒருபோதும் சம்மதிக்க மாட்டோம்

## ராய்டர்செய்தி நிறுவனத்திற்கு தொலைபேசி மூலம் திலகர் அறிவிப்பு

(நமது நிருபர்)

தமிழீழ விடுதலைப்புலிகள் அமைப்பு இடைக்கால சபை ஒன்றை அமைக்கும் தீர்வுக்கு எதி ர்புத் தெரிவித்துள்ளனர். வடக்கு கிழக்கு பிரச்சனைக்கு இடை க்கால சபை ஒன்றை உருவாக்கி அதன்மூலம் தீர்வைக் காண்பது என்ற கோரிக்கையை நிராகரி த்துள்ளனர்.

அரசு இராணுவத் தீர்வை அடைவதற்கு புலி எதிர்புக்குழு க்களைப் பயன்படுத்தவே இவ் வாறான தீர்வுக்கு வருகின்றது.'' இவ்வாறான ஒரு இடைக்காலத் தீர்வு அதற்கே வழிகோலும் என்று தொலைபேசியில் தொடர்பு கொ ண்டு ராய்டர் செய்தி நிறுவன த்திற்கு அறிவித்துள்ளார் புலி களின் பிரான்ஸ் பொறுப்பாளர் லோரன்ஸ் திலகர்.

ஈ.பி.டி.பி தலைவர் ராய்டருக்கு தகவல் தெரிவித்தபோது வடக்கு கிழக்குப் பிரச்சனைக்கு ஒரு தீர் வைக் கொண்டு வருவதற்கு ஒரு இடைக்கால தீர்வை முன்வை க்கும்படி அரசைக் கோரியதாகக் குறிப்பிட்டார். அதன்படியே ஒரு இடைக்கால சபையை நிறுவ வேண்டும் என்றும் வற்புறுத் தினேன் என்று கூறினார்.

நாம் ஒரு கவுன்சிலை நிறு வவேண்டும். அந்தக் கவுன்சிலில் சகல அமைப்பின் பிரதிநிதிகளும் இடம் பெற வேண்டும். அப் போதுதான ஒரு அமைதியான தீர்வு வடக்கு கிழக்கு பிரச் சனைக்கு சாத்தியமாகும் என்று தேவானந்தா குறிப்பிட்டுள்ளார்.